# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

**2021 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 23 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி**

*(2021.04.28 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*


# இலங்கை காப்புறுதி நிறுவகம் (கூட்டிணைத்தல்)

(தனியார் உறுப்பினர்களின் சட்டமூலம்)

**இலங்கை காப்புறுதி நிறுவகத்தை கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

*பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ மயந்த திசாநாயக்க அவர்களால்
பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது*


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 68.00** **தபாற் செலவு : ரூபா 35.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## இலங்கை காப்புறுதி நிறுவகத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

முன்னுரை

இதுவரை காலமும் “சிறீலங்கா இன்சூரன்ஸ் இன்ஸ்டிடியுட்” என்று அழைக்கப்பட்டும் அறியப்பட்டும் வந்த காப்புறுதித் தொழில் வல்லுனர்களின் சங்கம் அதன் அங்கத்தவர்கள் இணங்கியுள்ள அதன் நியதிச் சட்டத்துக்கு இணங்க மேற்படி நிறுவனத்துடன் தொடர்புடைய அனைத்து விடயங்களையும் செயல்திறன்மிக்கதாக செயற்படுத்தும் நோக்கத்துக்காகவும் நடாத்திச்செல்லும் நோக்கத்துக்காகவும் நிறுவப்பட்டுள்ளதனாலும் :

மேலும் மேற்படி சங்கமானது அதன் சபையுடன் சேர்ந்து இதுவரை காலமும் அது நிறுவப்பட்டுள்ள இலக்குகளிலும் நோக்கங்களிலும் பலவற்றை வெற்றிகரமாக நிறைவேற்றியுள்ளதனாலும் சட்ட ரீதியானதாக தாபிக்கப்படுவதற்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளதனாலும் அதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டால் பொதுமக்கள் நன்மை அடைவர் என்பதனாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப்பெயர்

**1**. இச்சட்டம், 2021 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, இலங்கை காப்புறுதி நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

நிறுவகத்தை கூட்டிணைத்தல்

**2**. (1) இந்தச் சட்டம் அங்கீகரிக்கப்பட்டதிலிருந்து மற்றும் அதன் பின்னர் மேற்படி நிறுவகத்தினது சபைத் தலைவர், உபதலைவர், கௌரவ செயலாளர், கௌரவ உப செயலாளர், கௌரவ பொருளாளர் மற்றும் சக சபை அங்கத்தவர்கள் மற்றும் மேற்படி நிருவகத்தின் தற்போதைய அங்கத்தவர்களாக இருக்கின்ற அனைவரும் இத்தால் தாபிக்கப்படுகின்ற நிறுவகத்தின் அங்கத்தவர்களாக இதன்பின்னர் ஏற்றுக்கொள்ளப்படுவார்கள், இவர்களது பெயர்கள் பிரிவு (3)இல் குறிப்பிடப்பட்டுள்ள பதிவேட்டில் பதியப்பட்டிருப்பதுடன், இங்கு குறிப்பிடப்பட்டுள்ள முறைக்கு இணங்க வரையறுக்கப்பட்ட பொறுப்புக்களை உடைய ஒரு

நிறுவகமாக மாறும். இது இலங்கை காப்புறுதி நிறுவகம் எனும் பெயரிலும் அமைப்பிலும் என்றும் தொடர்ந்து செயல்படும் என்பதுடன் அதன் பெயரில் வழக்குத் தாக்கல் செய்வதற்கும் இதற்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்படுவதற்கும் முடியும் என்பதுடன் அவர்களது விருப்பத்துக்கு இணங்க முழு அதிகாரத்துடனும் சக்தியுடனும் பொதுவான ஒரு முத்திரையை பாவிப்பதற்கும் அதனை மாற்றுவதற்கும் உரிமைபெறும்.

(2) இந்தச் சட்டத்தில் பாவிக்கப்படுகின்ற "நிறுவகம்" எனும் பிரயோகமானது இத்தால் தாபிக்கப்படுகின்ற மேற்சொன்ன இலங்கை காப்புறுதி நிறுவகத்தை சுட்டிக்காட்டும்.

நிறுவகத்தில் அங்கத்தவரா வதற்குரிய தகைமை

**3.** (1) பின்வரும் ஆட்கள் (18,19,20,21 மற்றும் 22) ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கு உட்பட்டு தகைமைபெறுவர் :-

(அ) சாதாரண அங்கத்துவத்துக்கு ;

(i) ஐக்கிய இராச்சியத்தின் பட்டய காப்புறுதி நிறுவகத்தின் சக அல்லது இணை அங்கத்தவராக இருக்கின்ற எவரும் அல்லது மேற்கூறப்பட்ட தகைமைக்கு சமமானதாக சபையினால் பரிந்துரைக்கப்படுகின்ற வேறேதும் காப்புறுதித் தகைமைகளைக் கொண்டுள்ளவர்கள் ;

(ii) நிறுவகத்தினால் நடாத்தப்படுகின்ற டிப்ளோமா அல்லது அதுபோன்ற வேறொரு தகைமை அல்லது பரீட்சைகள் வரை இட்டுச்செல்கின்ற பரீட்சைகளில் சித்தியடைந்து தகைமைபெற்றதன் பின்னர் அங்கீகரிக்கப்பட்ட காப்புறுதிக் கம்பெனியில் அல்லது காப்புறுதித் தரகுக் கம்பெனியில் மூன்று (3) வருட செயற்பாட்டு பயிற்சியைப் பூர்த்திசெய்துள்ள ஒருவர்; அல்லது

காப்புறுதித்தொழில் துறையில் குறைந்தது ஐந்து (5) வருட முகாமைத்துவத் தரத்தில் கடமையாற்றியுள்ள ஒருவர் சபையின் தற்றுணிபுக்கு இணங்க சாதாரண அங்கத்தவராக ஏற்றுக்கொள்ளப்படலாம்.

(ஆ) பதிவுசெய்யப்பட்ட அங்கத்துவத்துக்கு உபபிரிவு (i)இன்கீழ் அங்கத்துவத்துக்கு தகைமைபெறாத ஆனால் சபை தனது தற்றுணிபுக்கு இணங்க ஏற்றுக்கொள்வதற்கு முடிவுசெய்யக்கூடிய ஆட்கள் ;

(இ) கௌரவ அங்கத்துவத்துக்கு நிறுவகத்தின் கௌரவ உறுப்பினராக இருப்பதனால் தனித்துவத்தைப் பேண முடியும் எனவும் நிறுவகத்தின் நோக்கங்கங்களை பிரசாரம் செய்யக்கூடியவர் எனவும் சபை கருதக்கூடிய ஒரு ஆள் சபையின் கௌரவ அங்கத்தவராக இருப்பதற்கு அழைக்கப்படலாம் ;

(ஈ) ஆயுட்கால அங்கத்துவத்துக்கு, சபையினால் அவ்வப் போது பரிந்துரைக்கப்படுகின்ற கட்டணத்தைச் செலுத்தி ஆயுட்கால உறுப்பினராக இருப்பதனால் தனித்துவத் தைப் பேணமுடியும் என சபை கருதக்கூடிய ஆட்கள்.

*2*. இங்கு மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ள நிறுவகத்தின் அங்கத்தவர்கள் பற்றிய ஒரு பதிவேட்டை நிறுவகம் பராமரித்துவரும்.

அங்கத்தவர் களை வகைப்படுத்தல்

***4***. (1) நிறுவகத்தின் சாதாரண அங்கத்தவர்கள் பின்வரும் மூன்று (3) பிரிவுகளில் உள்ளடக்கப்படுவர் :-

(அ) நிறுவகத்தினால் வழங்கப்படுகின்ற காப்புறுதி டிப்ளோமாதாரிகள் ;

(ஆ) சபையினால் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய ஒரு நிறுவகத் தின் இணை உறுப்பினர் மற்றும் சக உறுப்பினர்கள் ;

(இ) சபையினால் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய வேலை அனுபவம்.

(2) நிறுவகத்தினால் நடாத்தப்பட்ட காப்புறுதி டிப்ளோமாவைப் பூர்த்திசெய்துள்ள மற்றும் சபையினால் பரிந்துரைக்கப்படுகின்ற பிரமாணங்களைப் பூர்த்திசெய்துள்ள நிறுவகத்தின் சாதாரண

அங்கத்தவர்கள். இவர்கள் இது சம்பந்தமாக சபைக்கு விண்ணப்பித்து நிறுவகத்தின் டிப்ளோமாதாரி என்றவகையில் பரிந்துரைக்கப்பட்ட ஒரு கட்டணத்தை செலுத்தி அதனை சபை ஏற்றுக்கொண்டதன் பின்னர் அவர் ''Dip. SLII''எனும் பின்னிணைப்பை பயன்படுத்த தகைமைபெறுவார்.

(3) சபையினால் பரிந்துரைக்கப்படக்கூடிய பிரமாணங்களைப் பூர்த்திசெய்கின்ற நிறுவகத்தின் ஒவ்வொரு சாதாரண அங்கத்தவர்களும் அது சம்பந்தமாக சபைக்கு விண்ணப்பித்து பரிந்துரைக்கப்படுகின்ற ஒரு கட்டணத்தை நிறுவகத்துக்கு செலுத்தி நிறுவகத்தின் இணை அங்கத்தவராக சபையினால் பதிவுசெய்துகொள்ளப்பட்டதன் பின்னர் ''ASLII''எனும் பின்னிணைப்பை அவர்களது பெயருக்குப் பின்னால் சேர்த்து தம்மை நிறுவகத்தின் ஒரு இணை அங்கத்தவராக சுட்டிக் காட்டுவதற்கு தகைமைபெறுவார்கள்.

(4) சபையினால் பரிந்துரைக்கப்படக்கூடிய பிரமாணங்களைப் பூர்த்திசெய்கின்ற நிறுவகத்தின் ஓர் இணை அங்கத்தவர் அது சம்பந்தமாக சபைக்கு விண்ணப்பித்து பரிந்துரைக்கப்படுகின்ற ஒரு கட்டணத்தை நிறுவகத்துக்கு செலுத்தி நிறுவகத்தின் சக அங்கத்தவராக சபையினால் பதிவுசெய்துகொள்ளப்பட்டதன் பின்னர் "FSLII" எனும் பின்னிணைப்பை அவர்களது பெயருக்குப் பின்னால் சேர்த்து தம்மை நிறுவகத்தின் ஒரு சக அங்கத்தவராக சுட்டிக்காட்டுவதற்கு தகைமைபெறுவார்.

(5) மேலுள்ள உபபிரிவு (2), (3) மற்றும் (4)இல் குறிப்பிடப்பட்டுள்ள தலைப்பையும் பின்னிணைப்பையும் சபையினால் அங்கீகரிக்கப் பட்டிருந்தாலன்றி எவரும் பயன்படுத்தலாகாது.

நிறுவகத்திற்கு வழங்கப்பட்டுள்ள ஆதனங்கள், உரிமைகள் மற்றும் பொறுப்புக்கள்

**5.** (1) இந்த சட்டத்தின் தொடக்கத்துடன் மேற்கூறப்பட்ட "இலங்கை காப்புறுதி நிறுவகத்துக்கு" சொந்தமான அனைத்து அசைகின்ற மற்றும் அசையாச் சொத்துக்களும், அவை அதன் பெயரில் அல்லது அதற்கான நம்பிக்கைப் பொறுப்பில் எவரேனும் ஒரு ஆளின் அல்லது ஆட்களின் பெயரில் அல்லது பெயர்களில்

இருந்தாலும் சரியே, அவை அனைத்தும் இத்தால் தாபிக்கப்படுகின்ற நிறுவகத்தின் பெயரில் வழங்கப்பட வேண்டும். அனைத்து சந்தாத் தொகைகளும், பங்களிப்புத் தொகைகளும், நன்கொடைகளும், அபராதத் தொகைகளும், கடன் தொகைகளும், பெறப்பட்ட அல்லது பெறப்படவுள்ள முன்கொடுப்பனவுகளும் தற்போதைக்கு நிறுவகத்தின் நியதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்க இந்த சட்டத்தின் நோக்கங்களுக்காக நிறுவகத்தின் கட்டுப்பாட்டில் வைக்கப்பட வேண்டும்.

(2) மேற்கூறப்பட்ட "இலங்கை காப்புறுதி நிறுவகத்தினால்" மற்றும் அதன் நோக்கங்கள் சார்பில் செய்துகொள்ளப்பட்ட மற்றும் இந்த சட்டத்தின் தொடக்கத்துக்கு உடன் முந்திய திகதியில் அமுலில் இருக்கின்ற அனைத்து ஒப்பந்தங்களும் உடன்படிக்கைகளும் இத்தால் தாபிக்கப்படுகின்ற நிறுவகத்தின் பெயரில் இருத்தல் வேண்டும் என்பதுடன் நிறுவகத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களாகவும் உடன்படிக்கைகளாகவும் கொள்ளப்பட வேண்டும்.

ஆயினும், இதுகாலவரைக்கும் அல்லது இதன் பின்னர் நிறுவகத்தினால் நம்பிக்கைப்பொறுப்பில் பெற்றுக்கொள்ளப்படுகின்ற அல்லது நம்பிக்கைப்பொறுப்பாளர் என்றவகையில் எவ்வாறு பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனைகளுக்கு உட்பட்ட அல்லது உட்படாத ஏதும் மானியத்தின் அல்லது உயிலின் நிபந்தனைகளுக்கு இணங்க நம்பிக்கைப்பொறுப்பில் வைக்கப்பட்டுள்ள அசைகின்ற அல்லது அசையாத ஏதும் சொத்துக்கள் எப்போதும் நிறுவகத்தினால் நம்பிக்கைப்பொறுப்பில் அல்லது மேற்கூறப்பட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு அல்லது உட்படாது அந்த ஆதனங்கள் தொடர்பாக நிறுவகத்தின்பால் விதிக்கப்படக் கூடிய பொறுப்புக்களுக்கு அமைய நம்பிக்கைப்பொறுப்பு சம்பந்தமான எழுதப்பட்ட சட்டத்தின் ஏற்பாடுகளின் நிபந்தனைகளுக்கு உட்பட்டு வைத்துக்கொள்ளப்பட வேண்டும்.

**இலங்கை காப்புறுதி நிறுவகத்துக்கு வரவேண்டிய மற்றும் செலுத்த வேண்டியுள்ள கடன்கள்**

**6**. இந்த சட்டம் அமுலுக்கு வருகின்ற சமயத்தில் இலங்கை காப்புறுதி நிறுவகத்தினால் செலுத்தப்படவேண்டி இருக்கின்ற கடன்கள் மற்றும் பொறுப்புக்கள் இத்தால் தாபிக்கப்படுகின்ற நிறுவகத்தினால் செலுத்தப்பட வேண்டும் என்பதுடன் மேற்கூறப்பட்ட இலங்கை காப்புறுதி நிறுவகத்துக்கு வரவேண்டிய கடன்கள், சந்தாக்கள், பங்களிப்புக்கள் மற்றும் அபராதங்கள் இத்தால் தாபிக்கப்படுகின்ற நிறுவகத்துக்கு செலுத்தப்படல் வேண்டும்.

**நிறுவகம் ஆதனத்தை தடுத்துவைத்துக் கொள்ளலாம்**

**7**. கொள்வனவு, மானியம், நன்கொடை அல்லது குத்தகை ஆகியவற்றினால் அல்லது உயிலை நிறைவேற்றல் காரணமாக அல்லது வேறுவிதமாக அசைகின்ற மற்றும் அசையாச் சொத்துக் களை அவற்றின் பூரண உரிமையாளராக, நன்மைபெறும் உரிமையாளராக அல்லது நம்பிக்கைப்பொறுப்பாளராக பெற்றுக் கொள்வதற்கு அல்லது வைத்துக்கொள்வதற்கு சட்டப்படி நிறுவகத்தினால் முடியும் என்பதுடன் அவ்வாறான அனைத்து சொத்துக்களும் நிறுவகத்தினால் வைத்துக்கொள்ளப்பட வேண்டும்:

இந்தச் சட்டத்தின் நோக்கத்துக்காக மற்றும் நிறுவகத்தின் தற்போதைக்குள்ள நியதிகளுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் உட் பட்டு ; அல்லது

அவ்வாறில்லாவிட்டால் நம்பிக்கைப்பொறுப்பின் நோக்கங் களுக்காகவும் அதன்மீதும் மற்றும் அதனுடன் தொடர்புடைய சாசனங்கள் அல்லது உள்ளடக்கப்பட்டுள்ள பகிர்ந்தளிக்கும் விதிகள் ஆகியவற்றின் நிபந்தனைகளுக்கும் உட்பட்டு முழுப்பலத்துடன் விற்கலாம், அடகுவைக்கலாம், பரிமாற்றலாம் அல்லது வேறு வகையில் கொடுக்கலாம், தடையுண்டாக்கலாம், வசூலிக்கலாம் அல்லது அதை வைத்து பேரம்பேசலாம்.

**அங்கத்தவர்களது பொறுப்பின் வரையறைகள்**

**8**. (1) இந்தச் சட்டத்தின்கீழ் நிறுவகத்தின் ஒவ்வொரு அங்கத் தவரினதும் பொறுப்பானது ரூபா 150.00 (நூற்றைம்பது ரூபாவுக்கு) மட்டுப்படுத்தப்பட்டிருக்கும். இதற்கு மேலதிகமான அவ்வாறான வருடாந்த சந்தாத் தொகை அந்த உறுப்பினரிடமிருந்து நிறுவகத் துக்கு வரவேண்டியதாக இருக்கும்.

(2) அங்கத்தவர்களால் நிறுவகத்துக்கு செலுத்தப்படவேண்டியுள்ள வருடாந்த சந்தாத் தொகை பற்றி சபை அவ்வப்போது குறிப்பிடும்.

நிறுவகத்தின் நோக்கங்கள்

**9**. நிறுவகம் தாபிக்கப்பட்டமைக்கான நோக்கங்களும் குறிக்கோள்களும் பின்வருமாறு இருக்கும் என இத்தால் பிரகடனம் செய்யப்படுகிறது :-

(அ) காப்புறுதித்துறையில் ஈடுபட்டுள்ள அல்லது வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ள ஆட்கள் மத்தியில், அவர்கள் நிறுவகத்தின் உறுப்பினர்களாக இருந்தாலும் சரி இல்லாவிட்டாலும் சரியே, அவர்களது சொந்த முன்னேற்றத்துக்காக மட்டுமன்றி அந்த வியாபாரத்தை மிகவும் செயல்திறன்மிக்கதாக மேற்கொள்வதற்கும் காப்புறுதிச் சந்தையில் தொழில்சார் நடத்தையின் தராதரங்களை ஏற்படுத்தி பராமரித்து வருவதற்குமாக செயல்திறனையும் முன்னேற்றத்தையும் விருத்திசெய்வதற்காகவும் அவர்கள் மத்தியில் பொதுவான மற்றும் தொழில்சார் முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்காகவும் ஒரு மைய அமைப்பை ஏற்பாடுசெய்து பராமரித்துவருதல் ;

(ஆ) சபையினால் பரிந்துரைக்கப்படக்கூடிய பிரமாணங்களைப் பூர்த்திசெய்துள்ள காப்புறுதித் தொழில்வல்லார்களுக்காக நிறுவகத்தின் உரிய சான்றுப்படுத்தல்களையும் அங்கீகாரத்தையும் வழங்குவது உட்பட எனினும் அதற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படாது காப்புறுதித் தொழில்சார் தகைமைகளைக்கொண்டவர்களை சான்றுப்படுத்தி அவர்களுக்கு உரிய சான்றிதழ்களை வழங்குதல் ;

(இ) அங்கத்தவர்கள் மற்றும் அங்கத்தவர்கள் அல்லாதவர்கள் மத்தியில் காப்புறுதித்துறைசார் கல்வியை ஊக்குவித்தலும் விருத்திசெய்தலும் ;

(ஈ) அங்கீகரிக்கப்பட்ட தேசிய கல்வி நிறுவகங்களாக இருந்தாலும் சரி அல்லது சர்வதேச கல்வி நிறுவகங்களாக இருந்தாலும் சரி அவற்றின் ஊடாக காப்புறுதியின் எந்தப் பிரிவையும் சார்ந்த எந்தப் பாடத்தையும் பற்றிய தொழில்சார் அறிவைப் பெற்றுக்கொள்ள ஊக்கமளிப்பதும் ஒத்துழைப்பு வழங்குதலும் ;

(உ) காப்புறுதி விடயம் சார்ந்த அல்லது காப்புறுதியுடன் தொடர்புடைய கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் மற்றும் எவரேனும் ஆட்கள் அல்லது நிறுவகங்களுக் காகவும் அவர்கள் சார்பிலும் பரீட்சைகளை நடாத்துதல் ;

(ஊ) ஒரு சஞ்சிகையை வெளியிடுதல் மற்றும் சபையினால் விரும்பத்தக்கதாக கருதப்படக்கூடிய வேறேதும் விடயங் கள் பற்றி பிரசுரம் செய்தல் ;

(எ) காப்புறுதித்துறை சார்ந்த எந்தவொரு விடயத்தையும் பற்றிய கட்டுரைகள் அல்லது ஆராய்ச்சிகளுக்காக விருதுகளை வழங்குதல் ;

(ஏ) காப்புறுதியுடன் தொடர்புபடக்கூடிய அனைத்து செயற்பாட்டுத்துறைகளுடன் தொடர்புடைய சட்டத்தையும் நடைமுறையையும் ஆராய்ந்து அறிந்துகொள்ளல் மற்றும் உறுதியான நிபுணர்கள் குழாம் ஒன்றை உருவாக்குதல் ;

(ஐ) நிறுவகத்தின் உறுப்பினர்கள் தொடர்பில் தொழில்சார் கண்காணிப்பையும் கட்டுப்பாட்டையும் செயற்படுத்தல், அவர்களது உரிமைகளையும் நலனையும் பாதுகாத்தல், அவர்களது முன்னேற்றத்தை மேலும் விருத்திசெய்தல் மற்றும் பொதுவாக காப்புறுதி உத்தியோகத்தர்களினதும் குறிப்பாக நிறுவகத்தின் அங்கத்தவர்களினதும் தராதரத்தை முன்னேற்றக்கூடிய எந்தவொரு விடயத் தையும் ஊக்குவித்தல் ;

(ஒ) உறுப்பினர்களுக்காக சமூக மன்றம் ஒன்றை உருவாக்குதல் ;

(ஓ) நிறுவகத்தின் அங்கத்தவர்கள் மத்தியில் தனிப்பட்ட மற்றும் தோழமைமிக்க உறவை ஊக்குவித்தல் ;

(ஔ) தொழில்சார் அலுவல்கள், உரிமைகள் மற்றும் கடமைகள் பற்றிய கலந்துரையாடல்களுக்கான மாநாடுகளையும் கூட்டங்களையும் நடாத்துதல், ஆக்கங்களை வாசித்தல் மற்றும் விரிவுரைகளை வழங்குதல், உறுப்பினர்களின் உரிமைகள் சம்பந்தமான பட்டியல்களையும் பதிவேடு களையும் நிகழ்வுகளின் அறிக்கைகளையும் தயாரித்தல், நிறுவகத்தின் உறுப்பினர்களுக்கு அவ்வப்போது மேற்படி பட்டியல்களின், பதிவேடுகளின் மற்றும் அறிக்கைகளின் பிரதிகளை வழங்குதல் ;

(க) எல்லாவிதமான கேள்விகள், பிரச்சினைகள் மற்றும் காப்புறுதியுடனும் இலங்கை காப்புறுதித்துறையுடனும் தொடர்புடைய ஏனைய விடயங்கள்பற்றி கரிசனை செலுத்துதல் ;

(கா) காப்புறுதி மற்றும் காப்புறுதித் தொழிலுக்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய சட்ட மற்றும் ஏனைய விடயங்களை ஊக்குவிப்பதற்கு அல்லது எதிர்ப்புத் தெரிவிப்பதற்கு முயற்சி மேற்கொள்ளல் ;

(கி) காப்புறுதி மற்றும் காப்புறுதித் தொழிலுடன் தொடர்புடைய தரவுகள் மற்றும் ஏனைய தகவல்களை சேகரித்தலும் வழங்குதலும் ;

(கீ) காப்புறுதி மற்றும் காப்புறுதித் தொழிலுடன் தொடர் புடைய விடயங்கள் பற்றி பொதுமக்கள் அதிகாரசபை, ஒழுங்கமைப்பாளர்கள், ஏனைய இடங்களில்/நாடுகளில் உள்ள இவற்றை ஒத்த சங்கங்கள் மற்றும் தனிப்பட்ட வர்களுக்க ஆலோசனை வழங்குதலும் தொடர்பாடல் செய்தல் ;

(கு) நிறுவகத்தின் நோக்கங்களுக்காக கடன் பெறுதல் அல்லது பணம் திரட்டுதல் மற்றும் அந்த நோக்கத்துக்காக அல்லது நிறுவகத்தின் ஏதும் கடமைகளை அல்லது பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு அல்லது செய்துமுடிப்பதற்காக அல்லது ஏதும் அடவுகள், முறிகளை உருவாக்குதல், செயற்படுத்துதல், மானியம் வழங்குதல் அல்லது நிறுவகத்தின் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக பணத்தை பாதுகாப்பாக வைத்தல் மற்றும் அதன்மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட பணத்தை அல்லது அதன் ஒரு பாகத்தை அல்லது பாகங்களை செலுத்துதல் அல்லது மீளக் கடன்பெறல் ;

(கூ) நிறுவகத்தின் நோக்கத்துக்காக அசைகின்ற அல்லது அசையாத சொத்துக்களைக் கொள்வனவு செய்தல், விற்றல், குத்தகைக்கு எடுத்தல் அல்லது வேறேதும் ஒருவகையில் கையாளுதல் ;

(கெ) மேலுள்ள அனைத்தையும் அல்லது அதில் ஏதேனும் ஒரு விடயத்தை உலகின் எந்த இடத்தில் வைத்தும் முதல்வர்கள், முகவர்கள், நம்பிக்கைப்பொறுப்பாளர்கள் என்றவகையில் அல்லது வேறேதும் ஒருவகையில் செய்தல் மற்றும் முகவர்கள், நம்பிக்கைப்பொறுப்பாளர்கள் அல்லது வேறொருவரின்மூலமாக மற்றும் தனித்தோ அல்லது ஏனையவர்களுடன் இணைந்தோ செய்தல் மற்றும் ; அத்துடன்

(கே) காப்புறுதித்துறையினதும் காப்புறுதி தொழில்வல்லுநனர் சமுதாயத்தினதும் இலங்கை காப்புறுதிக் கம்பெனிகளினதும் உரிமைக்கு அல்லது நன்மைக்கு அல்லது மேற்சொன்ன குறிக்கோள்களை அல்லது அதில் சிலவற்றை அடைந்துகொள்வதற்கு அல்லது பொதுவாக காப்புறுதிக்கும் இலங்கைக் காப்புறுதித்துறையின் நன்மைக்கு, பாதுகாப்புக்கு அல்லது முன்னேற்றத்துக்கு அவசியமாகின்ற, இன்றியமையாத அல்லது உகந்த ஏனைய அனைத்து விடயங்களையும் மேற்கொள்ளல்.

அட்டவணையிலுள்ள விதிகள் நிறுவகத்தின் விதிகளாக இருக்கும்

**10.** பிரிவு (11)இன் ஏற்பாடுகளுக்கு உட்பட்டு அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகள் அனைத்து நோக்கங்களுக்காகவும் நிறுவகத்தின் விதிகளாக இருக்கும் என்பதுடன் அதன் நடவடிக்கைகளையும் அதன் உறுப்பினர்களையும் கட்டுப்படுத்தும். இருந்தபோதிலும் இந்தப் பிரிவில் உள்ளடக்கப்பட்டுள்ள எதுவும் இதன் பிற்பாடு புதிய விதிகளை விதித்தல் அல்லது அவற்றை திருத்துதல், மாற்றங்களைச் செய்தல். சேர்த்தல் அல்லது அட்டவணையிலுள்ள அல்லது பிரிவு (11)க்கு இணங்க இதன் பிற்பாடு நிறுவகத்தினால் செய்யப்படக்கூடிய ஏதேனும் ஒரு விதியை இரத்துச்செய்தல் ஆகியவற்றில் நின்றும் ஒருபோதும் நிறுவகத்தை தடுப்பதாக அர்த்தம் கொள்ளப்படக் கூடாது.

விதிகளில் திருத்தம்

**11.** (1) ஏதும் ஒரு பொதுக்கூட்டத்தில் சமுகமளித்திருந்த சாதாரண உறுப்பினர்களில் மூன்றில் இரு பிரிவினரால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு தீர்மானத்தின்மூலம் அட்டவணையிலுள்ள விதிகள் மாற்றப்படலாம், சேர்க்கப்படலாம், திருத்தப்படலாம் அல்லது இரத்துச்செய்யப்படலாம்.

இருந்தபோதிலும் மேற்படி கூட்டம் இடம்பெறுவதற்கு குறைந்தது பதினான்கு (14) நாட்களுக்கு முன்னர் ஒவ்வொரு சாதாரண உறுப்பினர்களுக்கும் மேற்படி கூட்டத்தில் வைத்து சமர்ப்பிக்கப்படவுள்ள திருத்தப் பிரேரணை பற்றிய எழுத்துமூல அறிவித்தல் அனுப்பப்பட வேண்டும்.

(2) ஒரு பொதுக்கூட்டத்தில் வைத்து நிறுவகத்தினால் மேற்கொள்ளப்பட்ட வேறெந்தத் தீர்மானமும் அதன்பின்னர் இடம்பெற்ற ஒரு பொதுக்கூட்டத்தில் சமுகமளித்திருந்த பெரும்பான்மை உறுப்பினர்கள் வாக்களித்து தீர்மானித்திருந்தாலன்றி திருத்தப்படவோ, சேர்க்கப்படவோ மாற்றப்படவோ அல்லது இரத்துச் செய்யப்படவோ கூடாது.

இருந்தபோதிலும் மேற்படி கூட்டம் இடம்பெறுவதற்கு குறைந்தது பதினான்கு (14) நாட்களுக்கு முன்னர் ஒவ்வொரு சாதாரண உறுப்பினர்களுக்கும் மேற்படி கூட்டத்தில் வைத்து சமர்ப்பிக்கப்படவுள்ள திருத்தப் பிரேரணை பற்றிய எழுத்துமூல அறிவித்தல் அனுப்பப்பட வேண்டும்.

நிறுவகம் விதிகளை அறிமுகம் செய்யலாம்

**12.** உறுப்பினர்களின் ஒரு பொதுக்கூட்டத்தில் வைத்து மற்றும் சமுகமளித்திருந்த உறுப்பினர்களின் முன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளினால் அவ்வப்போது பின்வருவன தொடர்பில் நிறுவகம் விதிகளை உருவாக்குவதும் தீர்மானங்களை எடுப்பதும் சட்டரீதியானதாக இருக்கும் ;

(அ) உறுப்பினர்களை உள்வாங்குதல் அல்லது வெளியேற்றல் அல்லது உறுப்பினர்களை வாபஸ்பெறல் ;

(ஆ) அபராதங்களை விதித்தல் மற்றும் விதிகளை மீறியமைக்காக பறிமுதல் செய்தல்கள் ;

(இ) சபை உத்தியோகத்தர்களின் பதவிக்காலத்தை தீர்மானித்தல் ;

(ஈ) சபையினதும் அதன் உறுப்பினர்களினதும் கடமைகளை வரையறுத்தல் ;

(உ) தொழில்சார் துர்நடத்தையின் பின்விளைவுகள் உட்பட நிறுவகத்தின் உறுப்பினர்கள் பின்பற்றவேண்டிய மற்றும் கடைப்பிடிக்கவேண்டிய நடத்தைக் கோவையை உருவாக்குதல் ;

(ஊ) ஒரு பொதுக்கூட்டத்தின் அலுவல்கள் எவ்வாறு இடம்பெற வேண்டும் என்ற செயன்முறை ;

(எ) சபையின் ஓர் உறுப்பினரின் பதவிக்காலத்தை முடிவுக்குக் கொண்டுவருதல் ; அல்லது

(ஏ) சபையைத் தெரிவுசெய்தல் மற்றும் அதன் கடமைகள்.

சபையின் யாப்பு

**13.** (1) நிறுவகத்தின் சபை ஒன்று இருக்கும் இந்தச் சட்டத்தில் அது “சபை” என்று அழைக்கப்படும். நிறுவகத்தின் அலுவல்கள் இதன்பின்னர் வழங்கப்படுகின்றவாறு தற்போதைக்கு நிறுவகத்தின் விதிகளுக்கு உட்பட்டு சபையினால் நிருவகிக்கப்படும்.

(2) தற்போதைக்கு விதிகளில் வழங்கப்பட்டுள்ளவாறு சாதாரண அங்கத்தவர்கள் மத்தியிலிருந்து தெரிவுசெய்யப்படக்கூடிய பின்வரும் உறுப்பினர்களை சபை கொண்டிருக்கும் :

(அ) தலைவர்

(ஆ) உப தலைவர்

(இ) கௌரவ செயலாளர்

(ஈ) கௌரவ உதவிச் செயலாளர்

(உ) கௌரவ தனாதிகாரி மற்றும்

(ஊ) ஆறு சக சபை அங்கத்தவர்கள்

(3) இந்தச் சட்டத்தில் "தலைவர்", "உப தலைவர்", "செயலாளர்", "உதவிச் செயலாளர்", "தனாதிகாரி" மற்றும் "சக சபை அங்கத்தவர்கள்" எனக் குறிப்பிடப்படுகின்ற பிரயோகங்கள் மேலே உப பிரிவு (2)இல் உருவாக்கப்பட்டுள்ள உறுப்பினர்களை முறையே குறிக்கும்.

(4) நிறுவகத்தின் முதலாவது சபையானது (பெயர்கள்) இலங்கை காப்புறுதி நிறுவகத்தின் சபை உறுப்பினர்களாக இருக்கின்ற முறையே நடப்புத் தலைவர், உப தலைவர், கௌரவ செயலாளர், கௌரவ உதவிச் செயலாளர், கௌரவ தனாதிகாரி மற்றும் சக சபை உறுப்பினர்களாவர்.

(5) சபை உறுப்பினர்கள் என்றவகையில் செயற்படுவதற்காக அல்லது கடமைகளை நிறைவேற்றுவதற்காக சபையின் எந்தவொரு அங்கத்தவருக்கும் எந்தக் கொடுப்பனவும் மேற்கொள்ளப்படலாகாது.

சபையின் பொதுவான அதிகாரங்களும் கடமைகளும்

**14.** (1) நிறுவகத்தின் நிருவாகம் மற்றும் முகாமைத்துவம் சபையின் வசமுள்ளதுடன் இந்த சட்டத்தின் ஏற்பாடுகளையும் இந்த சட்டத்தினால் சபை மீது சுமத்தப்பட்டுள்ள அல்லது வழங்கப்பட்டுள்ள அலுவல்களையும் கடமைகளையும் நிறைவேற்றுவது சபையின் பொறுப்பாகும்.

(2) பின்வருவன சபையின் பொறுப்பாகும் :

(அ) நிறுவகத்தின் அங்கத்துவத்துக்கான தகுதிகாண் பரீட்சைகளை நடாத்துதல் அல்லது நடாத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்தல் மற்றும் அந்தப் பரீட்சைகளுக் கான பாடவிதானங்களை பரிந்துரைத்தல் அல்லது அங்கீகரித்தல் ;

(ஆ) நிறுவகத்தின் அங்கத்தவர்களது ஒரு பதிவேட்டை பராமரித்தலும் வெளியிடுதலும் ;

(இ) தொழில்சார் துர்நடத்தையின் பின்விளைவுகள் பற்றி அங்கத்தவர்களது அங்கீகாரத்துக்கு சமர்ப்பித்தல் மற்றும் அவ்வப்போது அதற்கான திருத்தங்களை முன்வைத்தல் உள்ளிட்ட நிறுவகத்தின் அங்கத்தவர்களுக்காக நடத்தைக் கோவை ஒன்றை தயாரித்தல் ;

(ஈ) நிறுவகத்தின் அங்கத்தவர்கள் மத்தியில் தொழில்சார் தராதரத்தைப் பேணுதல் மற்றும் அந்த தராதரங்களை பராமரிப்பதற்குத் தேவையான வழிமுறைகளையும் செயன்முறைகளையும் அவர்களுக்கு தெரியப்படுத்து வதற்கு அவசியமாகக்கூடிய நடவடிக்கைகளை மேற் கொள்ளல் ;

(உ) சபையின் அனைத்து கூட்டங்களிலும் நிறுவகத்தின் அனைத்து பொதுக்கூட்டங்களிலும் கலந்துகொள்ளல், அவற்றை ஏற்பாடுசெய்தல், பங்கேற்றல் ;

(ஊ) ஒவ்வொரு வருடாந்த பொதுக்கூட்டத்தின்போதும் நிறுவகத்தின் நிதி அல்லது வேறுவகை நிலைமைகள் பற்றியும் கடந்த வருடத்தின்போது நிறுவகத்தின் அலு வல்கள் மற்றும் நடவடிக்கைகள் பற்றியும் ஓர் அறிக்கை சமர்ப்பித்தல் ;

(எ) பொதுமக்கள் மத்தியில் காப்புறுதி பற்றி அறிவூட்டல் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்வதை ஊக்குவித்தலும் அவற்றை அதிகரித்தலும் ;

(ஏ) காப்புறுதியுடன் தொடர்புடைய நூல்களையும் சஞ்சிகைகளையும்கொண்ட ஒரு நூல் நிலையத்தை நடாத்துதலும் இலங்கையில் அவ்வாறான நூல்களைப் பிரசுரிக்கத் தூண்டுதலும் ; மற்றும்

(ஐ) காப்புறுதி விடயம் பற்றி இலங்கையில் ஆராய்ச்சிகளைத் தூண்டுதலும் பொதுவாக காப்புறுதித்துறையின் நலனையும் முன்னேற்றத்தையும் பாதுகாத்தலும்.

(3) பின்வரும் விடயங்கள் பற்றி சபைக்கு ஆற்றலும் அதிகாரமும் உண்டு :

(அ) பொருத்தமானது எனக் கருதும்பட்சத்தில் நிறுவகத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் இருந்து விலக்களிப்பதற்கான தகைமைப் பிரமாணங்கள் பற்றி பரிந்துரைத்தல் ;

(ஆ) நிறுவகத்தினால் நடாத்தப்படுகின்ற கல்வி நிகழ்ச்சிகளுடன் தொடர்புடைய பாடவிதானங்களை அவ்வப்போது பரிந்துரைத்தலும் நிர்ணயித்தலும் ;

(இ) கூட்டு நிகழ்ச்சிகளை நடாத்துவதற்கு ஏனைய நிறுவகங்களுடன் ஒப்பந்தங்களைச் செய்துகொள்ளல் ;

(ஈ) நிறுவகத்தினதும் அனைத்து குழுக்களினதும் வேலைகளைக் கட்டுப்படுத்தல், ஒத்துழைத்தல் மற்றும் நெறிப்படுத்தல் மற்றும் நிறுவகத்தின் நலனுக்காக ஓர் உடனடித் தீர்மானம் அவசியமாகக்கூடிய அனைத்து விடயங்களையும் கையாளுதல் ;

(உ) நிறுவகத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காகவும் அதன் அலுவல்களை மேற்கொள்வதற்காகவும் அவர்களுக்கே உரிய நடைமுறையை ஒழுங்கமைப்பதும் ஏற்பாடுசெய்தலும் ;

(ஊ) நிறுவகத்தின் வருமானம், ஆதனங்கள் மற்றும் அலுவல்கள் சம்பந்தமான ஏக கட்டுப்பாட்டையும் முகாமைத்துவத்தையும் பெற்றுக்கொள்ளல் ;

(எ) அதிகாரங்களைப் பிரயோகித்தலும் நிறுவகத்தினால் மேற்கொள்ளப்படக்கூடிய அல்லது செய்யப்படக்கூடிய அனைத்து செயற்பாடுகளையும் விடயங்களையும் மேற்கொள்ளுதல் ;

(ஏ) பொருத்தமானது எனக் கருதக்கூடிய நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு நிறுவகத்துக்கு உத்தியோகத்தர்களை நியமித்தலும் சம்பளம்பெறும் உத்தியோகத்தர்களை விலக்குதலும் ;

(ஐ) நிறுவகத்தின் நிதியின் ஒரு பாகத்தை நூல்கள், அறிக்கைகள், தரவுகள், கணக்குகள், ஆவணங்கள், வரைபடங்கள், திட்டங்கள், உபகரணங்கள், மாதிரிகள் மற்றும் காப்புறுதி தொழில்துறையின் நன்மைக்கான ஏனைய விடயங்களை ஏற்பாடுசெய்வதற்கும் பராமரிப்பதற்குமாக செலவுசெய்தல் ;

(ஒ) நிறுவகத்தின் தேவைகளுக்காக உடனடியாக அவசியப்படாத நிதியை நிறுவகத்தின் பெயரில் வர்த்தக வங்கிகளிலும் சபை அங்கீகரிக்கின்ற அரசாங்க பிணையங்களிலும் முதலீடுசெய்தல் ;

(ஓ) தற்காலிகமாக பணத்தை கடனாகப் பெறுதலும் அதற்கான வட்டியை செலுத்துதலும் ;

(ஔ) நிறுவகத்தின் நிதியின் ஒரு பாகத்தை விரிவுரையாளர்கள் மற்றும் மன்றங்களுக்கான மதிப்பூதியம் செலுத்துவதற்கும் அல்லது புலமைப்பரிசில் வழங்குவதற்கும், கண்காட்சிகள், நிறுவகத்தினால் அல்லது வேறு கல்வி நிறுவனங்களால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளின் ஏதேனும் ஒரு பாடத்துடன் தொடர்புடைய பரிசுகள் மற்றும் விருதுகள் வழங்குவதற்கும் பயன்படுத்துதல் ;

(க) நிறுவகத்தின் நோக்கங்களுக்காகவும் அதன் குறிக் கோள்களை பெருக்குவதற்கும் பிரயோசனமாக இருக்கும் எனக் கருதக்கூடிய ஒப்பந்தங்களை மேற்கொள்ளல் மற்றும் அனைத்து செயற்பாடுகளையும் விடயங்களையும் செய்தல் ;

(கா) அவசியப்படக்கூடியவாறு ஏதேனும் ஒரு வங்கியில் அல்லது வங்கிகளில் நிறுவகத்தின் பெயரில் கணக்கு களை பேணுதலும் செயற்படுத்துதலும் ;

(கி) நிறுவகத்தின் அங்கத்தவர்களுக்கான கூட்டத்தை நடாத்தும் இடமாகப் பயன்படுத்துவதற்காக அல்லது கல்லூரியாக, விரிவுரை அல்லது வாசிப்பு அறையாக அல்லது நூல்நிலையமாக அல்லது சமூக நோக்கங் களுக்காக அல்லது மேற்படி நோக்கங்களை அல்லது அவற்றில் ஒரு நோக்கத்தை நிறைவுசெய்துகொள்வதற்காக வேறேதும் சொத்தை, அது உண்மையான அல்லது தனிப்பட்ட சொத்தாக இருந்தாலும் சரி, ஒரு கட்டிடத்தை அல்லது கட்டிடங்களை கொள்வனவு செய்தல், வாட கைக்கு அமர்த்துதல், குத்தகைக்கு எடுத்தல், தடுத்து வைத்தல் அல்லது விற்றல் ;

(கீ) நிறுவகத்தின் நோக்கங்களுடன் தொடர்புடைய மற்றும் அதனை நிறைவேற்றுவதற்காக பரிசுகளை ஏற்றுக் கொள்ளல் அல்லது வழங்குதல் அல்லது நன்கொடை அளித்தல் ;

(கு) நிறுவகத்தின் பிரதிநிதியாக அல்லது முகவராக ஒரு ஆளை அல்லது ஆட்கள் எவரையேனும் பெயரிடும் அல்லது நியமிக்கும் நோக்கத்துக்காக அல்லது இலங்கை யில் அல்லது வெளிநாட்டில் மேற்சொன்ன அனைத்து அல்லது ஏதேனும் ஒரு நோக்கத்துக்காக ஒரு ஆளுக்கு அல்லது எவரேனும் ஆட்களுக்கு ஏதேனும் விடயங்களை ஒத்திவைக்கும் நோக்கத்துக்காக ஓர் ஒப்பந்தம், உடன்படிக்கை செய்துகொள்ளல் அல்லது வேறேதும் ஆவணங்களில் கையெழுத்திடல் மற்றும் நிறைவேற்றல் ; அல்லது

(கூ) பொதுவாக மேலுள்ள குறிக்கோள்களை அல்லது அவற்றில் ஏதேனும் ஒன்றை அடைந்துகொள்வதற்கு இன்றியமையாத அல்லது உகந்த அனைத்து விடயங்களையும் ஏனைய சட்டரீதியான செயற்பாடுகளையும் மேற்கொள்ளல்.

குழுக்கள்

**15.** சபை குழுக்களை நியமித்து சபையின் அதிகாரங்களில் சிலவற்றை அவர்களுக்கு பரவலாக்கும் அல்லது இணக்கத்துக்கு வரக்கூடிய சில கடமைகளை பொறுப்புச்சாட்டும் குழுக்கள் அவர்களது அதிகாரங்களைப் பிரயோகிக்கும்போது சபையினால் விடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு இணங்கி நடப்பார்களாயினும் ஏனைய அனைத்து விடயங்களிலும் அவர்களது சொந்த நடைமுறையை செயற்படுத்துவார்கள். இருந்தபோதிலும் தலைவர், உபதலைவர் மற்றும் கௌரவ செயலாளர் ஆகியவர்கள் தங்களது பதவிகளின் அதிகாரத்துக்கு இணங்க ஒழுக்காற்று மற்றும் மேன்முறையீட்டு குழுக்களைத் தவிர ஏனைய குழுக்களின் கூட்டங்களில் பங்கேற்கும் தகைமையைப் பெறுவார்கள்.

ஒழுங்கு விதிகளை உருவாக்குவதற்கான அதிகாரம்

**16.** (1) சபை இந்தச் சட்டத்துக்காக அல்லது இந்த சட்டத்தின்மூலம் கோரப்பட்டுள்ள அல்லது அதிகாரமளிக்கப்பட்டுள்ள ஏதும் விடயம் சம்பந்தமாக பரிந்துரை செய்வதற்காக அல்லது இந்தச் சட்டத்தின்கீழ் அதன் அதிகாரங்களுடன், செயற்பாடுகளுடன் அல்லது கடமைகளுடன் தொடர்புடைய அல்லது அவை சம்பந்தமாக அல்லது அதன் முறையான நடைமுறைப்படுத்தல், நிறைவேற்றல் அல்லது செய்துமுடித்தலுக்காக ஒழுங்குவிதிகளை உருவாக்கும்.

(2) உப பிரிவு (1)இன் ஏற்பாடுகளின் பொதுப்படையான தன்மைக்கு பங்கமேற்படாதவாறு பின்வரும் அனைத்து அல்லது ஏதேனும் விடயங்களுக்காக சபை ஒழுங்குவிதிகளை உருவாக்கும் :-

(அ) சபையின் கூட்டங்களைக் கூட்டி அவற்றை நடாத்துதல், அந்த கூட்டங்களின் நேரம் இடங்கள் மற்றும் அவற்றில் கலந்துரையாடவுள்ள விடயங்கள் ;

(ஆ) நிறுவகத்தினதும் சபையினதும் ஆதனங்களை நிருவகித்தல், அதன் நிதியை பாதுகாத்தல் மற்றும் அதன் கணக்குகளை பராமரித்தலும் கணக்காய்வு செய்தலும் ;

(இ) நிலையான அல்லது ஏனைய குழுக்களை சபையினால் தெரிவுசெய்தல் அல்லது நியமித்தல், அந்த குழுக்களின் அதிகாரங்கள், செயற்பாடுகள் மற்றும் கடமைகள், அந்த அதிகாரங்கள் பிரயோகிக்கப்படும்போது உட்படுத்தப்பட வேண்டிய நிபந்தனைகள் மற்றும் நிறைவேற்றப்பட வேண்டிய அல்லது பரவலாக்கப்படவேண்டிய செயற்பாடுகளும் கடமைகளும் ;

(ஈ) சபையின் அதிகாரிகளின் அதிகாரங்கள், செயற்பாடுகள் மற்றும் கடமைகள் மற்றும் சம்பளம், கட்டணங்கள், கொடுப்பனவுகள் மற்றும் அந்த அதிகாரிகளினதும் ஊழியர்களினதும் சேவை நிபந்தனைகள் ;

(உ) சபையின் அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் தொடர்பான ஒழுக்காற்று கட்டுப்பாடுகளை அமுல்படுத்தல் ;

(ஊ) சேரும்போது கொடுப்பனவு மேற்கொள்ளும்முறை மற்றும் நேரம், பதிவு மற்றும் புதுப்பித்தல் கட்டணம், புதுப்பித்தல் கட்டணம் செலுத்தத் தவறும்பட்சத்தில் அங்கத்துவத்தை இடைநிறுத்தல் மற்றும் அவ்வாறான அங்கத்துவத்தை மீளப் புதுப்பிப்பதற்கான நிபந்தனைகள் ;

(எ) தொழில்சார் துர்நடத்தைக்கு இட்டுச்செல்லும் விடயங்களைக் குறிப்பிடல் ;

(ஏ) ஒழுக்காற்றுக் குழுவொன்று தாபிக்கப்படும்முறை ;

(ஐ) ஒழுக்காற்றுக் குழுவொன்று விசாரணை ஒன்றை நடாத்தக்கூடியமுறை ;

(ஒ) தகுதிகாண் பரீட்சைகளுக்காக உள்வாங்கப்பட்டுள்ள மாணவர்களால் நிறுவகத்துக்கு செலுத்தப்படவேண்டிய கட்டணங்கள் அல்லது நிறுவகத்தினால் வழங்கப்படுகின்ற வழிகாட்டல் பாடநெறிகள் ஆகியவற்றுக்காக செலுத்தப்படவேண்டிய கட்டணங்கள் மற்றும் விரிவுரையாளர்கள் மற்றும் பரீட்சிப்பவர்களின் சேவையைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் அவர்களுக்கான சம்பளம் ; அத்துடன்

(ஓ) மாணவர்கள் சமுதாயத்துக்கு நிதிசார் அல்லது வேறுவகை உதவிகளை வழங்குதல்.

*ஆலோசனைச் சபை.*

**17.** (1) சபையின் பதவிக்காலத்துக்காக நான்கு (4) அங்கத்தவர்களை ஆலோசகர்களாக சபையுடன் கலந்தாலோசித்துவிட்டு தலைவர் பெயரிடுவார்.

(2) இந்த நான்கு (4) அங்கத்தவர்களும் சபைக்கான ஆலோசனைச் சபையாக செயற்படுவதுடன் சபைக்கு ஆலோசனைகளை வழங்குவார்கள்.

(3) ஆலோசனைச் சபைக்கு பெயரிடப்படக்கூடிய அங்கத்தவர்கள் காப்புறுதித் தொழிலில் அல்லது அதுபோன்ற வேறு துறைகளில் பிரபலமானவர்களாக இருக்கவேண்டியதுடன் அதில் ஒரு அங்கத்தவர் ஐக்கிய இராச்சியத்தின் பட்டயக் காப்புறுதி நிறுவகத்தினால் நியமனத்துக்காக பரிந்துரைக்கப்படலாம்.

(4) ஆலோசனைச் சபை அல்லது அதன் அங்கத்தவர்கள் சபையின் அழைப்பின்பேரில் சபையின் கூட்டங்களில் கலந்துகொள்ளலாமாயினும் அதில் வாக்களிக்கும் உரிமை அவர்களுக்குக் கிடையாது.

(5) ஆலோசனைச் சபையின் ஓர் அங்கத்தவரின் பதவிக்காலம் சபையின் பதவிக்காலமாக இருப்பதுடன் மீளத் தெரிவுசெய்யப்படுவதற்கு அவர்களுக்குத் தகுதி உண்டு.

(6) ஆலோசனைச் சபையின் ஓர் அங்கத்தவர் சபையின் பெரும்பான்மையினரின் தீர்மானத்துக்கு இணங்க மாத்திரமே நீக்கப்படலாம்.

பொதுவான தகுதி யிழப்புக்கள்.

**18.** (1) எந்த ஒரு ஆளும் பின்வரும் சந்தர்ப்பங்களில் நிறுவகத்தின் ஓர் அங்கத்தவராக சேர்த்துக்கொள்ளப்பட மாட்டார்:

(அ) அவர் பதினெட்டு வயதை அடைந்திருக்காவிட்டால் மற்றும் ஓர் இலங்கைப் பிரசையாக இருக்காவிட்டால் ;

ஆயினும், இருந்தபோதிலும் சபை அதன் பூரண தற்றுணிபுக்கு இணங்க இலங்கையில் நிரந்தரமான வசிப்பிடத்தைக் கொண்டிருக்கும் ஒருவருக்கு அவர் இலங்கைப் பிரசையாக இல்லாவிட்டாலும்கூட அவர் பிரபலமான ஒரு நபர் எனக் கருதப்படுவாரேயானால் அவருக்கு கௌரவ அங்கத்துவத்தை வழங்கலாம் ;

(ஆ) தகைமைவாய்ந்த ஒரு நீதிமன்றத்தினால் புத்திசுவாதீனம் அற்றவர் எனத் தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தால் ;

(இ) கடனிறுக்கும் தன்மை அற்றவர் அல்லது வங்குரோத்து நிலைக்குட்பட்டவர் எனத் தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தால், அவரது கடனிறுக்க முடியாத தன்மை அல்லது வங்குரோத்து நிலைமை முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ தவிர்க்கமுடியாத இழப்பிலிருந்து அல்லது துரதிஷ்டவசமாக ஏற்பட்டிருந்தமையை உறுதிசெய்யும் ஒரு சான்றிதழை தகுதிவாய்ந்த ஒரு நீதிமன்றம் வழங்கி இருக்காவிட்டால் ;

(ஈ) இலங்கை அல்லது வேறொரு நாட்டின் தகுதிவாய்ந்த ஒரு நீதிமன்றத்தினால் சிறையில் அடைக்கப்பட்டு அல்லது அதனையொத்த தண்டனைமூலம் தண்டிக்கப்பட முடியுமான தார்மீக இழிகுணம் சம்பந்தப்பட்ட ஏதும் குற்றத்துக்கு தண்டனை வழங்கப்பட்டிருந்தால் மற்றும் இலவச மன்னிப்பு வழங்கப்படாதிருந்தால் ;

(2) இந்தப் பிரிவின் பந்தி (ஆ) அல்லது பந்தி (இ) அல்லது பந்தி (ஈ)இல் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு தகுதியிழப்புக்கு உட்பட்டிருந்தால் நிறுவகத்தின் அங்கத்தவராக இருக்கின்ற எந்த ஒருவரையும் சபை விலக்கும் :

இருந்தபோதிலும் அவ்வாறான விலக்குதல்கள் பின்னர் ஒரு சந்தர்ப்பத்தில் அவர் மீளச் சேர்த்துக்கொள்ளப்படத் தகுதியானவர் எனத் திருப்திப்படும்பட்சத்தில், அந்த ஆளை மீண்டும் சேர்த்துக்கொள்வதில் நின்றும் சபையைத் தடுக்காது.

தொழில்சார் துர்நடத்தை காரணமாக அங்கத்துவத்தை இரத்துச் செய்தல்

**19.** (1) நிறுவகத்தின் ஓர் அங்கத்தவராக இருக்கின்ற ஒருவரை அவர் தொழில்சார் துர்நடத்தைக்கு குற்றவாளியாக்கப்பட்டதன் காரணத்தால் காப்புறுதித்துறையில் வேலைக்கு அமர்த்தப்படவோ அல்லது ஈடுபடவோ தகுதியற்றவர் என்று சபை அதிருப்தி அடைந்தால் சபை அவரது அங்கத்துவத்தை இரத்துச்செய்யலாம்.

(2) ''தொழில்சார் துர்நடத்தை'' என்பதன் கருத்து இதன் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(3) உபபிரிவு (1)இன்கீழ் ஒரு ஆளின் பதிவை இரத்துச் செய்வதானது பின்னர் அவர் பற்றி திருப்தி அடையும்பட்சத்தில், அந்த ஆளை மீளச் சேர்த்துக்கொள்வதில் நின்றும் சபையைத் தடுக்காது.

ஒழுக்காற்றுக் குழுவினால் மேற்கொள்ளப் படுகின்ற விசாரணைகள்

**20.** (1) ஓர் ஒழுக்காற்றுக் குழு விசாரணையை மேற்கொண்டதன் பின்னர் ஒரு ஆள் தொழில்சார் துர்நடத்தைக்கு குற்றவாளி யாக்கப்பட்டுள்ளார் என சபைக்கு ஓர் அறிக்கை சமர்ப்பித்தாலன்றி பிரிவு (18) அல்லது (19) ஆம் பிரிவின்கீழ் ஓர் ஆளின் அங்கத்து வத்தை சபை இரத்துச்செய்யாது.

(2) ஒரு முறைப்பாடு காரணமாகவோ அல்லது வேறுவகையிலோ நிறுவகத்தின் ஓர் அங்கத்தவராக இருக்கின்ற ஒரு ஆள் தொழில்சார் துர்நடத்தைக்காக குற்றவாளியாக்கப்பட்டிருப்பதாக நம்புவதற்கு சபைக்கு நியாயமான காரணம் இருப்பின் அந்த ஆளின் நடத்தை சம்பந்தமாக ஒரு விசாரணையை மேற்கொள்ளும் நோக்கத்துக்காக ஓர் ஒழுக்காற்றுக் குழுவை சபை நியமிக்கலாம்.

*(3)* இந்தப் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்டுள்ள ஒழுக்காற்றுக் குழுவினால் பின்பற்றப்படக்கூடிய அமைப்புவிதி மற்றும் செயற்பாடுகள் தொடர்பாக பிரயோகிக்கப்படவேண்டிய ஏற்பாடுகள், அந்தக் குழுக்களால் விசாரணைகளின்போது பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் மற்றும் அந்தக் குழுக்களால் பயன்படுத்தப்படுகின்ற அதிகாரங்கள் ஆகியன சபையினால் பரிந்துரைக்கப்படும்.

*அங்கத்துவத்தை இரத்துச் செய்வதற்குப் பதிலாக இடைநிறுத்தல்*

***21.*** *(18)* அல்லது *(19)* ஆம் பிரிவுக்கு இணங்க நிறுவகத்தின் அங்கத்துவத்தில் இருந்து ஒரு ஆளை நீக்குவதற்கு சபைக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ள ஒரு சந்தர்ப்பத்தில் அந்த அதிகாரத்தைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக சபை பொருத்தம் எனக் கருதக்கூடிய ஒரு காலஎல்லைக்கு அந்த ஆளை சபை அங்கத்துவத்தில் இருந்து இடைநிறுத்தலாம்.

*சபையின் தீர்மானத்துக்கு எதிராக மேன்முறையீட்டு சபையிடம் மேன்முறையீடு செய்தல்*

***22.*** *(1)* சபையின் ஒரு முடிவினால் துன்பத்துக்குள்ளான ஒரு ஆள் அந்த நோக்கத்துக்காக யாப்புரீதியாக அமைக்கப்பட்டுள்ள மேன்முறையீட்டுச் சபையிடம் மேன்முறையீடு செய்யலாம்.

(அ) மேன்முறையீட்டுச் சபையானது காப்புறுதித்துறையில் ஐந்து (5) வருடங்களுக்கு மேலாக முகாமைத்துவ அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் கடமையாற்றியுள்ள குறைந்தது பதினைந்து (15) வருடகால அனுபவத்தைக் கொண்டுள்ள மூன்று (3) பேரை மத்தியஸ்தர்களாகக் கொண்டிருக்கும்.

(ஆ) மேலுள்ள பந்தி (அ)வுக்கு உட்பட்டு சபை மற்றும் துன்பத்துக்கு உள்ளான தரப்புக்கும் ஒவ்வொரு மத்தியஸ்தரை தமது சார்பில் நியமிக்கும் அதிகாரமுண்டு.

(இ) அவ்வாறு நியமிக்கப்பட்ட மத்தியஸ்தர்கள் மேன்முறையீட்டுச் சபையின் மூன்றாவது மற்றும் பிரதான மத்தியஸ்தரை நியமித்துக்கொள்வார்கள்.

(ஈ) மேன்முறையீட்டுச் சபையினால் பின்பற்றப்படக்கூடிய நடைமுறைகள் அந்த மேன்முறையீட்டுச் சபையினால் தீர்மானிக்கப்பட்டு நிர்ணயிக்கப்படும்.

(2) மேன்முறையீட்டுச் சபையின் தீர்மானத்தினால் துன்பத்துக் குள்ளான ஒருவர் அந்தத் தீர்மானத்துக்கு எதிராக இலங்கையின் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்யலாம்.

(3) உபபிரிவு (2)இன்கீழ் ஒரு தீர்மானத்துக்கு எதிரான ஒவ்வொரு மேன்முறையீடும் ;

(அ) எழுத்துமூல ஒரு பெட்டிஷன்மூலம் மேற்கொள்ளப்பட வேண்டும் ;

(ஆ) அந்த முடிவு மேற்கொள்ளப்பட்டு நாற்பத்து இரண்டு (42) நாட்களுக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் ;

(இ) அவ்வாறான சுருக்க விசாரணையின் பின்னர் மேன்முறையீட்டு நீதிமன்ற ஒரு நீதிபதியினால் அது விசாரிக்கப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட வேண்டும்.

இந்த சட்டத்துக்கான திருத்தங்கள்

**23.** இந்த சட்டத்தை திருத்துவதற்கான ஏதேனும் ஒரு யோசனை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர் ஒரு பொதுக்கூட்டத்தில் சமுகமளித்திருக்கக்கூடிய சாதாரண அங்கத் தவர்களில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளால் அது அங்கீகரிக்கப்பட வேண்டும்.

இருந்தபோதிலும் ஒரு திருத்த யோசனை அவ்வாறான ஒரு கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கான யோசனை பற்றிய எழுத்துமூல அறிவித்தல் அதற்கு பதினான்கு (14) நாட்களுக்கு முன்னர் ஒவ்வொரு சாதாரண அங்கத்தவர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

தடுக்கப் பட்டவைகள்

**24.** நிறுவகம் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் ஒரு செயற்பாட்டில் ஈடுபட மாட்டாது :-

(அ) நிறுவகம் அதன் அங்கத்தவர்களுக்கு நிதிசார் வருமானம் அல்லது இலாபம் பெற்றுக்கொள்ளும் நோக்கில் ஏதேனும் வர்த்தகம் அல்லது வியாபாரத்தை மேற்கொள்ளாது

அல்லது ஏதேனும் கொடுக்கல் வாங்கலில் ஈடுபடாது. எந்தவொரு அங்கத்தவருக்கும் நிறுவகத்தின் எந்தவொரு ஆதனத்தின்மீதும் தனிப்பட்ட உரிமைகள் கிடையாது அல்லது நிறுவகத்தின் சம்பளம் பெறுகின்ற ஊழியராக இருக்கின்ற சந்தர்ப்பங்களைத் தவிர அங்கத்துவத்தில் இருந்து எந்தவித இலாபமும் பெறலாகாது.

(ஆ) நிறுவகம் வியாபாரம் அல்லது விலைகள் சம்பந்தமாக வரையறை செய்யமுயற்சிக்கவோ அல்லது வேறேதும் ஒருவகையில் தலையீடு செய்யவோ அல்லது ஏதேனும் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடவோ மாட்டாது ;

(இ) நிறுவகம் ஏதேனும் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடவோ அல்லது அதன் நிதி அல்லது சொத்துக்களை அரசியல் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படுவதை அனுமதிக்காது ;

(ஈ) நிறுவகத்தின் வளாகத்தில் எந்த ஒருவகையான சூதாட்டமும் தடைசெய்யப்பட்டுள்ளது ;

(உ) நிறுவகத்தின் நிதியம் நீதிமன்றத்தினால் குற்றவாளியாக் கப்பட்டுள்ள உறுப்பினர்களது அபராதத் தொகைகளை செலுத்துவதற்குப் பயன்படுத்தப்படக் கூடாது.

உத்தியோகத் தர்களது நட்டஈடு

**25.** (1) ஊழியர்கள் அவர்களது கடமைகளை நிறைவேற்றிய தனால் அவர்களுக்கு எதிரான ஏதும் உரிமைக் கோரிக்கைகளின் விளைவாக அவர்களால் எதிர்கொள்ளப்பட்ட அனைத்து இழப்புக்களுக்கும் நட்டஈடு வழங்கப்படும். மேற்படி இழப்பு அவர்களது வேண்டுமென்ற செயற்பாட்டினால் அல்லது தவறினால் ஏற்பட்டிருந்தால் இது ஏற்புடையதாகாது.

(2) சபையின் ஒரு அங்கத்தவர் அல்லது வேறொரு உத்தி யோகத்தர் சபையின் வேறொரு உறுப்பினருக்கு அல்லது உத்தி யோகத்தருக்கு அல்லது செயற்பாடுகளில் அல்லது பெறுதல்களில் இணையவோ அல்லது ஏதேனும் ஒரு செயற்பாட்டில் இணங்கி

நடக்கவோ அல்லது நிறுவகத்துக்கு ஏற்படுகின்ற ஏதும் இழப்புக்களில் பங்கேற்கவோ கடமைப்பட்டில்லை. இது அவரது சொந்த வேண்டுமென்று மேற்கொள்ளப்பட்ட தவறின் காரணமாக ஏற்பட்டிருந்தாலன்றி.

*தவறுகளும் அபராதங்களும்*

**26.** (1) இந்த சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு மாற்றமாக நடக்கின்ற ஒரு ஆள் இந்தச் சட்டத்தின்கீழ் ஒரு குற்றத்துக்கு குற்றவாளி யாக்கப்படுவதுடன் ஒரு நீதிவான் முன்னிலையில் மேற்கொள்ளப் பட்ட ஒரு விசாரணையின் பின்னர் குற்றவாளி என்று தீர்ப்பு வழங்கப்பட்டால் இந்த சட்டத்தின்கீழ் பரிந்துரைக்கப்படுகின்ற அபராதத்துக்கு உட்படுவார்.

(2) இந்தச் சட்டத்தின்கீழ் ஒரு தவறுக்காக சபையின் ஓர் அங்கத்தவருக்கு அல்லது உத்தியோகத்தருக்கு சபையினால் அந்த நோக்கத்துக்காக எழுத்தில் அங்கீகாரம் அளிக்கப்பட்டிருந்தாலன்றி வழக்குத் தொடர முடியாது.

*கலைத்தல்*

**27.** தற்சமயம் இலங்கையில் வசிக்கின்ற நிறுவகத்தின் ஐந்தில் மூன்றுக்குக் குறையாத சாதாரண அங்கத்தவர்கள் நேரடியாக அல்லது முறையாக நியமிக்கப்பட்டுள்ள ஒரு வழக்கறிஞர்மூலமாக நிறுவகத்தைக் கலைக்கும் நோக்கத்துக்காக கூட்டப்பட்ட ஒரு பொதுக்கூட்டத்தில் இணக்கம் தெரிவித்திருந்தாலன்றி நிறுவகம் கலைக்கப்படக் கூடாது. மேற்சொன்னவாறு நிறுவகம் கலைக்கப் பட்டால் நிறுவகத்தின் சார்பில் சட்டப்படி மேற்கொள்ளப்பட்டுள்ள அனைத்து கடன்கள் மற்றும் பொறுப்புக்கள் பூரணமாக செலுத்தி முடிக்கப்பட வேண்டும் என்பதுடன் எஞ்சியுள்ள நிதி அந்தப் பொதுக்கூட்டத்தில் பரிந்துரை செய்யப்பட்டுள்ள முறையில் கையாளப்பட வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*

**28.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

## *அட்டவணை*

## *இலங்கை காப்புறுதி நிறுவகத்தின் விதிகள்*

### *அங்கத்துவம்*

*சாதாரண அங்கத்துவத்துக்கு விண்ணப்பிக்கும் நடைமுறை*

***1.*** எவரேனும் ஒரு ஆள் நிறுவகத்தின் சாதாரண அங்கத்துவத்தைப் பெற்றுக்கொள்வதற்கான நடைமுறைகள் பின்வருமாறு :-

(i) நிறுவகத்தின் சாதாரண அங்கத்துவத்தைப் பெற்றுக் கொள்ள விரும்புகின்ற ஒருவர் சபையினால் பரிந் துரைக்கப்பட்டுள்ள படிவத்தில் ஒரு விண்ணப்பத்தை சமர்ப்பிக்கவேண்டியதுடன் சபையினால் பரிந்துரைக் கப்படுகின்றவாறு தேவையான ஆவணங்களையும் சபையின் கௌரவ செயலாளருக்கு சமர்ப்பித்தல் வேண்டும் ;

(ii) அந்த விண்ணப்பம் நிறுவகத்தின் இரண்டு அங்கத்தவர்களால் பிரேரிக்கப்பட்டு ஆமோதிக்கப்பட வேண்டும் ; அத்துடன்

(iii) அந்த விண்ணப்பமானது ஒழுங்குவிதிமூலம் விதிக் கப்பட்டுள்ள முறையில் சபையினால் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

*பதிவுசெய்யப்பட்ட அங்கத்துவத்துக்கு விண்ணப்பிக்கும் நடைமுறை*

***2.*** எவரேனும் ஒரு ஆள் நிறுவகத்தின் பதிவுசெய்யப்பட்ட அங்கத்துவத்தைப் பெற்றுக்கொள்வதற்கான நடைமுறைகள் பின்வருமாறு:-

(i) நிறுவகத்தின் பதிவுசெய்யப்பட்ட அங்கத்துவத்தைப் பெற்றுக்கொள்ள விரும்புகின்ற ஒருவர் சபையினால் பரிந்துரைக்கப்பட்டுள்ள படிவத்தில் ஒரு விண்ணப் பத்தை சமர்ப்பிக்கவேண்டியதுடன் சபையினால் பரிந்து ரைக்கப்படுகின்றவாறு தேவையான ஆவணங்களையும் சபையின் கௌரவ செயலாளருக்கு சமர்ப்பித்தல் வேண்டும் ;

(ii) அந்த விண்ணப்பம் நிறுவகத்தின் ஒரு சாதாரண அங்கத்தவரால் அங்கீகரிக்கப்பட வேண்டும் ; அத்துடன்

(iii) அந்த விண்ணப்பமானது சபையினால் பரிந்துரைக்கப் பட்டுள்ள முறையில் நிறுவகத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரியால் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

நிறுவகத்தின் அங்கத்துவக் கட்டணம்

**3.** (i) இலங்கை காப்புறுதி நிறுவகச் சட்டத்தின் (19 மற்றும் 20 ஆம்) பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கு உட்பட்டு நிறுவகத்தின் அங்கத்துவத்துக்கு தகைமைபெறுகின்ற ஒருவர் சபையினால் அவ்வப்போது ஒழுங்குவிதிமூலம் தீர்மானிக்கப்படக்கூடிய ஒரு கட்டணத்தை சபைக்கு செலுத்துவதன்மூலம் சேர்த்துக்கொள்ளப்படுவார்.

(ii) அந்தக் கட்டணமும் நிறுவகத்துக்கு வருமதியாகவுள்ள ஏனைய கொடுப்பனவுகளும் சபையினால் அவ்வப்போது பரிந்துரைக்கப்படுகின்ற முறையில் அல்லது சபை தாபிக்கப்பட்டிருக்காவிட்டால் இலங்கை காப்புறுதிச் சபைக்கு செலுத்தப்படல் வேண்டும். இலங்கை காப்புறுதிச் சபையானது சபை தாபிக்கப்படும்வரை சபைக்காக நம்பிக்கைப் பொறுப்பில் வைத்திருக்கும்.

(iii) நிறுவகத்தின் ஓர் அங்கத்தவராக உள்வாங்கப்பட்ட ஒரு ஆள் அவர் உள்வாங்கப்பட்ட அடுத்த வருடத்தின் சனவரி முதலாம் திகதி வரை அவரது அங்கத்துவம் அமுலில் இருக்கும். அங்கத்துவமானது ஒவ்வொரு புதுப் பித்தலின்போதும் பரிந்துரைக்கப்பட்ட கட்டணத்தை சபைக்கு செலுத்துவதன்மூலம் புதுப்பிக்கப்படலாம்.

(iv) ஒழுங்குவிதிமூலம் அவ்வப்போது சபையினால் தீர்மானிக்கப்படக்கூடிய வருடாந்த கட்டணம் ஒவ்வொரு வருடமும் சனவரி முதலாம் திகதியிலிருந்து இரண்டு மாதங்களுக்குள் செலுத்தப்பட வேண்டும்.

(v) மேற்கூறப்பட்டவாறு வருடாந்த கட்டுப்பணத்தை செலுத்துவதற்கு ஓர் அங்கத்துவர் தவறினால் அந்த அங்கத்துவரின் அங்கத்துவம் செயலிழந்துவிடும்.

(vi) இந்த விதிக்கு இணங்க செயலிழந்துள்ள ஓர் அங்கத்தவர் சபையினால் அவ்வப்போது பரிந்துரைக்கப்படக்கூடிய வேறு தொகைகளுடன் சேர்த்து மேற்கூறப்பட்ட வருடாந்த தொகையை செலுத்துவதன்மூலம் மீள்பதிவு செய்து கொள்ளலாம்.

### *சபை*

*சபையின் அங்கத்தவர் களைத் தெரிவுசெய்தல்*

**4.** (i) சபையின் அங்கத்தவர்கள் ஒவ்வொரு வருடாந்தக் கூட்டத்தில் வைத்து தெரிவுசெய்யப்பட வேண்டும்.

(ii) சபையில் பதவிவகிக்க விரும்புகின்ற மற்றும் தேர்வில் பங்கேற்க விரும்புகின்ற அங்கத்தவர்கள் பிரதான நிறைவேற்று அதிகாரிக்கு அல்லது அவர் இல்லாத பட்சத்தில் அந்த நோக்கத்துக்காக சபையினால் அதிகார மளிக்கப்பட்டுள்ள ஆளுக்கு பெயரிடப்பட்டுள்ள அங்கத்தவரின் எழுத்துமூல இணக்கத்துடன் வருடாந்த பொதுக் கூட்டம் இடம் பெறுவதற்கு ஏழு (7) நாட்களுக்கு முன்னர் இரண்டு சாதாரண அங்கத்தவர்களால் பிரேரிக்கப்பட்டு ஆமோதிக்கப்பட வேண்டும்.

(iii) இந்த விதியின்கீழ் சமர்ப்பிக்கப்பட்ட ஒரு விண்ணப்பம் சாதாரண அங்கத்தவர்களில் சமுகமளித்திருக்கக்கூடிய சாதாரண பெரும்பான்மை வாக்குகளுக்கு இணங்க ஒவ்வொரு பதவிக்குமாக நடாத்தப்படுகின்ற தெரிவுக்காக வருடாந்த பொதுக்கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

*சபைக்குத் தெரிவு செய்யப் படுவதற்கான தகைமை*

**5.** (i) சபைக்கு தெரிவுசெய்யப்படக்கூடிய அங்கத்தவர்களின் தகைமைகள் பின்வருமாறு :-

(அ) நிறுவகத்தின் சாதாரண அங்கத்தவர்கள் மாத்திரமே சபைக்குத் தெரிவுசெய்யப்படுவதற்கு தகைமைபெறுவர் ;

(ஆ) ஏற்கனவே சபையில் பதவிவகித்திருக்காத ஒரு சாதாரண அங்கத்தவர் சம உறுப்பினர் பதவியைத் தவிர்ந்த வேறு எந்த பதவிக்கும் தெரிவுசெய்யப்படத் தகுதியற்றவராவார் ;

(இ) குறைந்தது இரண்டு பதவிக்காலத்துக்கு சபை அங்கத்தவராகப் பதவி வகித்திராத ஒரு சாதாரண அங்கத்தவர் சபையின் தலைவராகவோ அல்லது உப தலைவராகவோ அல்லது செயலாளாராகவோ தெரிவுசெய்யப்படத் தகுதியற்றவராவார்;

(ஈ) பட்டயக் காப்புறுதியாளர், பட்டயக் காப்புறுதி செயற் பாட்டாளர் அல்லது பட்டயக் காப்புறுதித் தரகர் அல்லது ஐக்கிய இராச்சியத்தின் பட்டயக் காப்புறுதி நிறுவகத்தினால் வழங்கப்படுகின்ற அதனை ஒத்த தகைமையைப் பெற்றிராத ஒரு சாதாரண அங்கத் தவர் சபையின் தலைவராகத் தெரிவு செய்யப்படத் தகுதியற்றவராவார் ;

(உ) காலம் முடிவடைந்ததும் பதவிவிலகுகின்ற கௌரவ தனாதிகாரி பதவியை வகித்த ஒரு அங்கத்தவரைத் தவிர சபையின் வேறொரு அங்கத்தவர் சபையின் ஓர் அங்கத்தவராகத் தெரிவுசெய்யப்படலாம் ; அத்துடன்

(ஊ) தொடர்ந்து இரண்டு தடவைகளுக்கு மேலதிகமாக சபையின் தலைமைப் பதவியை வகிக்க எந்த ஒருவரும் தகைமை பெற மாட்டார்கள்.

(ii) இந்த விதிகளுக்கு அல்லது இலங்கை காப்புறுதி நிறுவகச் சட்டத்தின் ஏதும் ஒழுங்கு விதிக்கு முரணாக இருப்பினும் அது பற்றிக் கவனியாது, ஒரு தனி நிறுவனத்திலிருந்து இரண்டு அங்கத்தவர்களுக்குமேல் சபைக்கு பெயரிடப் படலாகாது.

(iii) சபையின் உடனடி முன்னாள் தலைவர் அவரது பதவியின் அதிகாரத்துக்கு இணங்க அடுத்த வருடாந்த பொதுக் கூட்டம் முடிவடையும்வரை ஓர் அங்கத்தவராக இருப்பார். ஆயினும் அவருக்கு சபையில் வாக்களிக்கும் உரிமை கிடையாது. அந்த அங்கத்தவர் இரண்டாவது தடவையாகவும் சபையின் தலைவராக மீளத் தெரிவு செய்யப்பட்டால் மேற்படி பதவியை வகித்த சபையின் முன்னாள் தலைவர் தொடர்ந்து அவ்வாறே அங்கத்தவராகத் தொடர்ந்திருப்பார்.

சபை அங்கத்தவர்களது பதவிக்காலம்

**6.** சபையின் ஒவ்வொரு அங்கத்தவரும் அவர் பதவியிலிருந்து விலகாதிருந்தால் அவர் தெரிவுசெய்யப்பட்ட வருடாந்த பொதுக் கூட்டம் முடிவடைந்த திலிருந்து ஆரம்பமாகி அடுத்த வருடாந்த பொதுக்கூட்டம் முடியும்வரை பதவிவகிப்பார்.

**7.** சபையின் கூட்டங்கள் :-

சபையின் நடைமுறைகள்

(i) சபையானது மாதத்துக்கு ஒரு தடவை அவ்வப்போது தீர்மானிக்கப்படுகின்ற இடத்தில் கூடும் ;

(ii) சபையின் கூட்டங்களுக்கு தலைவர் தலைமைதாங்க வேண்டியதுடன் அவர் இல்லாதபட்சத்தில் உப தலைவர் அல்லது அவரும் இல்லாதபட்சத்தில் சமுகமளித்திப் பவர்கள் மத்தியிலிருந்து ஒரு தவிசாளர் தெரிவு செய்யப்படுவார் ;

(iii) இதன்பின்னர் விபரிக்கப்படுகின்றவாறு சபையின் பிரதான நிறைவேற்று அதிகாரி சபையின் கூட்டங்களில் கலந்து கொள்வார் என்பதுடன் பிரதான நிறைவேற்று அதிகாரிக்கு ஏதேனும் ஒரு காரணத்தால் கலந்துகொள்ள முடியாதுபோனால் நிறுவகத்தின் ஒரு அதிகாரி பிரதான நிறைவேற்று அதிகாரியை பிரதிநிதித்துவம் செய்வார். மேற்படி அதிகாரி சபையின் அழைப்பின்பேரில் அந்தக் கூட்டங்களில் அவரது கடமைகளை நிறைவேற்றுவார்.

**கூட்டங்கள் பற்றிய அறிவித்தல்**

**8.** (i) சபையின் ஒரு கூட்டம் வேண்டிய நேரம் பின்வருபவர்களால் கூட்டப்படலாம் :-

(அ) தலைவரின் கட்டளைப்படி ; அல்லது

(ஆ) அவர் இல்லாவிட்டால் உபதலைவரால் ; அல்லது

(இ) சபையின் குறைந்தது இரண்டு அங்கத்தவரின் எழுத்துமூல வேண்டுகோளுக்கு இணங்க,

மேற்படி வேண்டுகோள் கௌரவ செயலாளருக்கு முடிந்தால் கலந்துரையாடப்படவுள்ள விடயத்தின் ஒரு பட்டியலுடன் மற்றும்/அல்லது மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் மற்றும் / அல்லது விடயங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

இருந்த போதிலும் ஓர் அவசரத்தின் போது இந்த துணை விதிக்கு இணங்க கட்டளை அல்லது வேண்டுகோள் அவ்வாறே குறிப்பிடப்பட வேண்டும் என்பதுடன் அவசரத்துக்கான காரணத்தை / காரணங்களை விளக்குகின்ற ஒரு கூற்றையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(ii) சபையின் ஒரு கூட்டத்தில் கலந்தாலோசிக்க வேண்டிய ஒரு விடயத்தை அல்லது மேற்கொள்ளப்பட வேண்டிய மற்றும் / அல்லது முன்வைக்கப்படவேண்டிய ஒரு நடவடிக்கையை முன்மொழிய விரும்பினால் சபையின் அடுத்த கூட்டத்தில் அந்த விடயம் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் எனக் கோரும் எழுத்துமூல வேண்டுகோளை கௌரவ செயலாளருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(iii) மேலுள்ள துணைவிதி (i)க்கு இணங்க ஒரு கட்டளை அல்லது வேண்டுகோள் கிடைக்கப்பெற்ற உடனே உத்தேச கூட்டம் நடைபெறும் திகதி, நேரம் மற்றும் இடம் ஆகியவற்றைக் குறிப்பிட்டு சபையின் ஒவ்வொரு அங்கத்தவருக்கும் ஏழு (7) நாட்கள் அறிவித்தலை அல்லது அவரசமாயின் மூன்று (3) நாட்கள் அறிவித்தலை கௌரவ செயலாளர் விடுத்தல் வேண்டும்.

(iv) கௌரவ செயலாளர் மேலுள்ள துணை விதி (iii)க்கு இணங்க விடுக்கப்பட்ட ஏதும் அறிவித்தல் இருப்பின் அத்துடன் சபையின் அங்கத்தவர்களுக்கு பின்வருவன வற்றை அனுப்பி வைத்தல் வேண்டும்:-

(அ) அந்தக் கூட்டத்தில் கலந்தாலோசிக்கப்படவேண்டிய அனைத்து விடயங்களையும் மேற்கொள்ளப்பட வேண்டிய அலுவல்களையும் பற்றிய ஒரு பட்டியல் மற்றும்

(ஆ) அவருக்குக் கிடைத்த அவசர கூட்டத்துக்கான காரணத்தை விளக்குகின்ற ஒரு கூற்று.

(v) கூட்டம்பற்றிய அறிவித்தல் கிடைக்கத் தகுதியுடைய சபை அங்கத்தவர்கள் அனைவரும் மேற்படி முறை வழுக்கலுக்கு எதிர்ப்புத் தெரிவிக்காது கூட்டத்தில் கலந்துகொண்டால் அல்லது கூட்டம் பற்றிய அறிவித்தல் கிடைப்பதற்கு தகுதியுடைய அனைத்து சபை உறுப் பினர்களும் வாக்களிப்பிற்கு இணங்குவார்களேயானால் கூட்டம் பற்றிய அறிவித்தலில் உள்ள ஓர் முறை வழுக்கல் விலக்கப்படும்.

*சபையின் கூட்டங் களுக்கான கோரம்*

**9.** (i) கோரம் இல்லையென்றால் சபையின் ஒரு கூட்டத்தில் எந்த ஒரு விடயமும் கலந்துரையாடப்படலாகாது.

(ii) ஆகக்குறைந்தது ஆறு (6) சபை அங்கத்தவர்கள் சமுகமளித்திருந்தால் சபையின் கூட்டத்துக்கான ஒரு கோரம் இருப்பதாகக்கொள்ளப்படும்.

(iii) சபையின் ஒரு கூட்டத்துக்கான நிச்சயிக்கப்பட்ட நேரத்திலிருந்து முப்பது (30) நிமிடங்களுக்குள் கோரம் காணப்படாவிட்டால் அந்தக் கூட்டம் அடுத்த வாரம் அதே நாளில் அதே நேரத்தில் அதே இடத்துக்கு பிற்போடப்பட வேண்டும் அல்லது தலைவரால்/ தவிசாளரால் நியமிக்கப்படக்கூடிய வேறொரு நாள், நேரம், இடத்துக்கு பிற்போடப் படலாம். அந்தப் பிற்போடல் பற்றி குறைந்தது மூன்று (3) நாட்கள் அறிவித்தல் எல்லா சபை அங்கத்தவர்களுக்கும் விடுக்கப்பட வேண்டும்.

**10**. சபையின் ஒரு கூட்டம் பின்வரும் ஒரு முறையில் நடாத்தப் படலாம் :- கூட்டம் நடத்தும் முறை

(i) கூட்டத்துக்காக நியமிக்கப்பட்டுள்ள ஓரிடத்தில், திகதியில் மற்றும் நேரத்தில் ஒரு கோரத்தை உருவாக்குகின்ற சபை அங்கத்தவர்கள் ஒன்று கூடுவதன் மூலம்;

(ii) ஒலி அல்லது ஒலியும் சாட்சியும் கொண்ட தொடர்பாடல் வசதியுடன், கூட்டத்தில் கலந்துரையாடப்படவுள்ள விடயங்கள் பற்றிய விளக்கமான ஒரு நிகழ்ச்சி நிரலுடன் அந்த விடயங்கள் தொடர்பான உரிய ஆவணங்கள் அனைத்தையும் சமர்ப்பித்து கூட்டம் இடம்பெறவுள்ள நேரத்தை எழுத்தில் அறிவித்து கலந்துகொள்கின்ற அனைவரும் ஒரே சமயத்தில் செவிமடுக்கத்தக்கவிதத்தில் ஒலி அல்லது ஒலியும் காட்சியும் கொண்ட தொடர்பாடல் வசதிமூலம்.

**11**. சபையின் தீர்மானங்கள் சபை அங்கத்தவர்கள் மத்தியில் எடுக்கப்படுகின்ற ஒரு வாக்கெடுப்புக்கு உட்பட்டிருக்கும் :- வாக்கெடுப்பு

(i) சபையின் ஒவ்வொரு அங்கத்தவருக்கும் ஒரு வாக்கு இருக்கும் ;

(ii) சபையின் ஒரு கூட்டத்துக்கு தவிசாளராக தலைமை வகிக்கின்ற தலைவர் அல்லது உப தலைவருக்கு ஒரு அறுதியிடும் வாக்கு இருக்கும் ;

(iii) சமுகமளித்திருக்கின்ற அனைத்து சபை அங்கத்தவர்களும் பேதமின்றி இணக்கம் தெரிவித்தால் அல்லது பெரும்பான்மை வாக்குகள் அதற்கு சார்பாக அளிக்கப்பட்டிருந்தால் சபையின் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்படும்.

(iv) அங்கத்தவர் வெளிப்படையாக தமது இணக்கமின்மையைத் தெரிவித்து கூட்டத்தின் தீர்மானத்துக்கு எதிராக வாக்களித்திருந்தாலன்றி சபையின் ஒரு கூட்டத்தில் சமுகமளித்திருந்த ஓர் அங்கத்தவர் இணக்கம்தெரிவித்து தீர்மானத்துக்கு சார்பாக வாக்களித்துள்ளதாகக் கருதப்படும்.

**12.** பின்வரும் முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ள எழுத்து மூல தீர்மானத்தினூடாக சபை அலுவல்களை மேற்கொள்ளும் :- எழுத்துமூல தீர்மானம்

(i) சபையின் பெரும்பான்மை அங்கத்தவர்களால் கையெழுத்திடப்பட்ட அல்லது இணக்கம் தெரிவிக்கப்பட்ட எழுத்துமூல தீர்மானமானது முறையாக அழைக்கப்பட்டு நடாத்தப்பட்ட சபையின் கூட்டத்தில் அங்கீகரிக்கப் பட்டிருந்தால் அது செல்லுபடியானதாகவும் நடை முறைக்கும் வரும் ;

(ii) அவ்வாறான ஒரு தீர்மானம் பல ஆவணங்களைக் கொண்டிருக்கும். (தொலைநகல் அல்லது அதனை ஒத்த தொடர்புசாதன ஆவணங்கள் உட்பட) அவை ஒவ்வொன்றும் சபையின் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட அங்கத்தவர்களால் கையொப்பமிடப்பட்டு இணக்கம் தெரிவிக்கப்பட்டிருக்கும் ;

(iii) அவ்வாறான ஏதும் ஒரு தீர்மானத்தின் ஒரு பிரதி சபையின் கூட்ட நடவடிக்கைகள் பற்றிய அறிக்கைப் புத்தகத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கும்.

**13.** சபையின் ஓர் அங்கத்தவரின் பதவி பின்வரும் சந்தர்ப்பங்களில் இரத்தாகிவிடும் :- சபையின் ஓர் அங்கத்தவரின் பதவிக் காலம் முடிவுக்கு வருதல்

(i) அந்த அங்கத்தவர் தனது பதவியை இராஜினாமா செய்வதாக எழுத்துமூல அறிவித்தல் கொடுத்து ஒரு (1) மாதம் முடிவடையும்போது ;

(ii) சபையின் பத்துக்குக் குறையாத உறுப்பினர்கள் பிரசன்னமாய் இருக்கக்கூடிய அந்த நோக்கத்துக்காகக் கூட்டப்பட்ட ஒரு விசேட சபைக் கூட்டத்தில் குறித்த அங்கத்தவரைத் தவிர்த்து சபையின் மூன்றில் இரண்டுக்குக் குறையாத பெரும்பான்மையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட குறித்த உறுப்பினரின் பதவி காலியாவதாக ஒரு தீர்மானம் மேற்கொள்ளப்பட்டால் ;

(அ) சபையினால் விடுமுறை அங்கீகரிக்கப்படாது தொடர்ந்து சபையின் மூன்று கூட்டங்களுக்கு அவர் சமுகமளிக்காவிட்டால் ;

(ஆ) அவர் வங்குரோத்துநிலைக்கு உள்ளானால் அல்லது கொடுப்பனவு இடைநிறுத்தப்பட்டால் அல்லது அவரது கடனாளிகளுக்காக அவரது சொத்தை உரிமை சாட்டினால் ;

(இ) அவர் புத்திசுவாதீனம் அற்றவராக மாறினால் ;

(ஈ) அவர் காப்புறுதித்துறையில் கடமைபுரிவதை நிறுத்திக்கொண்டால் ; அல்லது

(உ) அவரது நடத்தை சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதுபோனால்.

*அமைய வெற்றிடங்கள்*

**14**. பின்வரும் பதவிகளை சம்பந்தமாக ஒரு தற்காலிக வெற்றிடம் ஏற்பட்டால்;

(i) சபையின் தலைவர் பதவியாயின் எஞ்சியுள்ள காலத்துக்கு உப தலைவர் தலைவராக பொறுப்பேற்க வேண்டும் ;

(ii) சபையின் உபதலைவராயின் கௌரவ செயலாளர், கௌரவ தனாதிகாரி கௌரவ உதவிச் செயலாளர் ஆயின் சபையின் பெரும்பான்மை வாக்குகளால் நியமிக்கப்பட்ட ஒரு சபை அங்கத்தவர் எஞ்சியுள்ள காலத்துக்கு அந்தப் பதவியை வகிப்பார் ;

(iv) சபையின் பதவிக்காலத்தில் ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட சக சபை அங்கத்தவர்கள் ஆயின் சபையின் ஒரு தீர்மானத்தினால் நியமிக்கப்பட்ட நிறுவகத்தின் அதே அளவான சாதாரண உறுப்பினர்கள் எஞ்சியுள்ள காலத்துக்கு அந்த வெற்றிடங்களை நிரப்புவார்கள் ; அல்லது

(v) ஒரு சபையின் பதவிக்காலத்தில் எட்டு அல்லது அதற்கு மேற்பட்ட சபை அங்கத்தவர்களாயின் சபையின் எஞ்சியுள்ள அங்கத்தவர்கள் எஞ்சியுள்ள காலத்துக்காக பதவிவகிப்பதற்கு ஒரு சபைத் தேர்வுக்காக நிறுவகத்தின் சாதாரண அங்கத்தவர்களின் விசேட பொதுக் கூட்டத்தைக் கூட்டுதல் வேண்டும் என்பதுடன் மேற்கொண்டும் ஒரு பதவிக்காலம் பொருத்தமானது எனக் கருதினால் அந்தக் கூட்டத்தில் சாதாரண உறுப்பினர்களால் மேற்கொண்டும் ஒரு தீர்மானம் பிரேரிக்கப்பட வேண்டும்.

**பொதுக்கூட்டங்கள்**

**15.** வருடாந்த பொதுக்கூட்டமானது :- வருடாந்தப் பொதுக் கூட்டம்

(i) ஒவ்வொரு வருடத்தின் யூன் மாதம் முப்பதாம் திகதிக்கு முன்னர் வருடாந்த பொதுக்கூட்டம் என்றழைக்கப் படக்கூடிய நிறுவகத்தின் அனைத்து சாதாரண, ஆயுள் மற்றும் கௌரவ உறுப்பினர்களுக்குக் குறைந்தது பதினான்கு (14) நாட்கள் அறிவித்தல் கொடுத்ததன் பின்னர் ஒவ்வொரு வருடமும் நிறுவகத்தின் மொத்த அங்கத்தவர்களினதும் ஒரு பொதுக்கூட்டம் இடம்பெறல் வேண்டும்.

(ii) ஒவ்வொரு வருடாந்த பொதுக்கூட்டத்தின்போதும் பின்வரும் விடயங்கள் கலந்துரையாடப்படல் வேண்டும் :-

(அ) (i) கடந்த வருடாந்த பொதுக்கூட்டத்தின் அறிக்கை சமர்ப்பிக் கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்படல் ;

(ii) வெளியேறுகின்ற சபையின் வருடாந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்படல் ;

(iii) கடந்த நிதியாண்டுக்கான கணக்குக்கூற்றை சமர்பித்தலும் ஏற்றுக்கொள்ளப்படலும் ;

(iv) எதிர்வரும் வருடத்துக்கான சபை அங்கத்தவர் களைத் தெரிவுசெய்தல் ;

(v) எதிர்வரும் வருடத்துக்கான கணக்காய்வாளர் களைத் தெரிவுசெய்தல் ; அத்துடன் /அல்லது

(ஆ) அந்தக் கூட்டத்துக்கான அறிவித்தலில் விடுக்கப் பட்டுள்ள வேறேதும் அலுவல்கள் இருந்தால் அது பற்றிக் கலந்துரையாடல்.

(iii) மேற்படி அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளதைத் தவிர வேறேதும் விடயங்கள் வருடாந்த பொதுக் கூட்டத்தின் போது கலந்துரையாடப்படல் வேண்டும் என எவரேனும் ஒரு அங்கத்தவர் விரும்பினால் அந்த வருடத்தின் யூன் மாதத்தின் ஏழாம் (7) திகதிக்கு முன்னர் அந்த விடயம் செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

விசேட பொதுக்கூட்டம்

**16.** ஒரு விசேட பொதுக்கூட்டம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தலைவரால் அல்லது சபையின் பெரும்பான்மை வாக்குகளால் அல்லது தலைவருக்கு அல்லது தலைவராக பதில் கடமையாற்றும் எவரேனும் ஒரு ஆளுக்கு சாதாரண அங்கத்தவர்களின் குறைந்தது நான்கில் ஒரு பகுதியினர் அவ்வாறான ஒரு கூட்டத்தைக் கூட்டுமாறு கோரி எழுத்துமூல வேண்டுகோள்விடுக்கப்படுவதன்மூலம் கூட்டப்படலாம். அந்தக் கூட்டத்தின் நோக்கங்கள் கௌரவ செயலாளருக்கு வேண்டுகோள்விடுக்கப்படுகின்ற சமயத்தில் குறிப்பிட வேண்டும். அவ்வாறான கூட்டம் வேண்டுகோள் விடுக்கப்பட்டு இருபத்தொரு (21) நாட்களுக்குள் இடம் பெற வேண்டும்.

கூட்டம் பற்றிய அறிவித்தலும் ஒரு பொதுக் கூட்டத்தில் காலந்துரை யாடப்பட வேண்டிய விடயங்களும்

**17.** (i) ஒரு பொதுக்கூட்டமானது தற்போதைக்கு நிறுவகத்தின் அனைத்து அங்கத்தவர்களுக்கும் கூட்டத்தில் கலந்துரையாடப்படவுள்ள விடயங்களைக் குறிப்பிட்டு அந்தக் கூட்டம் இடம்பெறுவதற்கு பதினான்கு (14) நாட்கள் அறிவித்தல் கொடுத்தாலன்றி கூட்டப் படக்கூடாது.

(ii) எந்தவொரு பொதுக்கூட்டத்திலும் அல்லது அதன் பின்னர் அந்தக் கூட்டத்திற்கான அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தவிர வேறெந்த விடயங்களும் கலந்துரையாடப்படக்கூடாது.

(iii) இருபதுக்குக் குறையாத சாதாரண அங்கத்தவர்கள் ஒன்றிணைந்து ஒரு பொதுக்கூட்டத்துக்கு 21 நாட்களுக்கு முன்னர் செயலாளருக்கு அறிவித்தல் கொடுத்து ஏதும் குறிப்பிட்ட விடயம் அல்லது அலுவல் அந்தப் பொதுக் கூட்டத்தில் கலந்துரையாடப்படல் வேண்டும் என்று கேட்டுக்கொண்டால் அந்தப் பொதுக்கூட்டத்துக்கான அறிவித்தலில் பொதுக்கூட்டத்தில் மேற்படி விடயம் அல்லது அலுவல் கலந்துரையாடப்படும் என்ற விடயமும் உள்ளடக்கப்பட வேண்டும். அந்த அறிவித்தலை உள்ளடக்குவதனால் நிறுவகத்துக்கு மேலதிக செலவுகள் ஏற்படுமாயின் அதனை அந்த விடயம் கலந்துரையாடப் பட வேண்டும் என்று பிரேரித்த அங்கத்தவர்களால் பொறுப்பேற்கப்பட வேண்டும்.

பொதுக் கூட்டத்துக்கான கோரம்

**18.** (i) இங்குள்ள உபவிதி (3)க்கு உட்பட்டு கோரம் இல்லா விட்டால் எந்த அலுவலும் பொதுக்கூட்டத்தில் கலந்துரை யாடப்படலாகாது.

(ii) சாதாரண அங்கத்தவர்களில் குறைந்தது 20 சதவீதத்தினர் சமுகமளித்திருந்தால் அது ஒரு பொதுக் கூட்டத்துக்கான கோரமாகக் கொள்ளப்படும்.

எவ்வாறிருப்பினும் ஒரு கோரம் இன்றி ஒரு தவிசாளர் நியமிக்கப்படலாகாது.

(iii) பொதுக் கூட்டத்துக்காக நிச்சயிக்கப்பட்டுள்ள நேரத்துக்கு முப்பது (30) நிமிடங்களுக்குப் பின்னரும் ஒரு கோரம் காணப்படாவிட்டால் மேற்படி கூட்டம் அடுத்த வாரத்தில் அதேநாள் அதேநேரத்துக்கு அல்லது தவிசாளர் தீர்மானிக்கின்ற வேறொரு நாள், நேரம் மற்றும் இடத்துக்கு பிற்போடப்படுதல் வேண்டும்.

(iv) பிற்போடப்பட்ட ஒரு கூட்டத்தில் நிச்சயிக்கப்பட்ட நேரத் துக்கு 30 நிமிடங்களின் பின்னர் ஒரு கோரம் காணப்படா விட்டால் சமுகளித்துள்ள சாதாரண அங்கத்தவர்கள் ஒரு கோரத்தை உருவாக்கியுள்ளதாகக் கொள்ளப்படும்.

(v) மேலுள்ள உபபிரிவு (4)க்கு இணங்க உருவாக்கப்பட்ட ஒரு கோரத்துக்கு இலங்கை காப்புறுதி நிறுவகச் சட்டத்தின் (11) மற்றும் (23) ஆம் பிரிவின் கீழ் ஒரு தீர்மானத்தை மேற்கொள்ளும் அதிகாரம் கிடையாது.

பொதுக் கூட்டத்தில் வாக்களித்தல்

**19**. ஒரு பொதுக்கூட்டத்தின்போது ஒரு தீர்மானம் ஏற்றுக் கொள்ளப்படுவது பொதுக்கூட்டத்தில் சமுகமளித்திருந்த சாதாரண உறுப்பினர்கள் மத்தியில் பெரும்பான்மை வாக்குகளைக் கொண்டேயாகும். ஒரு பொதுக்கூட்டத்தில் வாக்குகள் சமமாக இருந்தால் தவிசாளருக்கு ஒரு அறுதியிடும் வாக்கைப் பயன் படுத்தலாம்.

பொதுக் கூட்டத்தில் ஒரு தவிசாளர்

**20**. சபையின் தலைவர் ஒவ்வொரு பொதுக்கூட்டத்திலும் தலைமைவகிப்பார். அவர் இல்லாதபட்சத்தில் உபதலைவர் அவரும் இல்லாவிட்டால் சபையின் உறுப்பினர்கள் மத்தியில் ஒருவர் தலைமைதாங்குவார். சபையின் உறுப்பினர்கள் சமுகமளித் திருக்காவிட்டால் அந்த நோக்கத்துக்காக சமுகமளித்திருக்கின்ற சாதாரண அங்கத்தவர்கள் மத்தியிலிருந்து ஒரு ஆள் அந்த நோக்கத்துக்காகத் தெரிவுசெய்யப்படுவார்.

பொதுக் கூட்டத்தை ஒத்திவைத்தல்

**21**. ஒரு பொதுக்கூட்டத்தில் தவிசாளருக்கு சமுகமளித் திருக்கின்ற மற்றும் ஒரு கூட்டத்தில் வாக்களிக்கின்ற பெரும்பான்மை உறுப்பினர்களின் இணக்கத்தோடு அவ்வப்போது அல்லது இடத்துக்கு இடம் கூட்டத்தை ஒத்திவைக்கலாமாயினும் ஒத்தவைப்பு இடம்பெற்ற கூட்டத்தின்போது கலந்துரையாடி முடிக்காத அலுவல்கள் இருந்தால் அதனைத் தவிர வேறேதும் விடயங்கள் கலந்துரையாடப்படலாகாது. ஒத்திவைப்பதற்கான தீர்மானம் அவ்வாறு நெறிப்படுத்தப்பட்டிருந்தாலன்றி கூட்டம் ஒத்திவைப்புபற்றி எந்த அறிவித்தலும் வழங்கப்படமாட்டாது.

நிதி ஏற்பாடுகள்

**22**. (i) சபையானது அதன் நிருவாகத்தின் கீழும் கட்டுப் பாட்டின்கீழும் ஒரு நிதியத்தை உருவாக்கி அதைப் பராமரித்துவரும். சபைக்குக் கிடைக்கக்கூடிய எல்லாப் பணமும் அதற்குச் செலுத்தப்பட வேண்டும் என்பதுடன் இந்தச் சட்டத்தின்கீழ் சபையின் அதிகாரங்களையும் செயற்பாடுகளையும் மேற்கொள்ளும்போது சபையினால் மேற்கொள்ளப்படுகின்ற எல்லா செலவுகளையும் பொறுப்புக்களையும் நிதியம் செலுத்தும்.

(ii) சபையானது இலங்கையில் ஏதும் ஒரு வங்கியில் அல்லது வங்கிகளில் ஒரு கணக்கை அல்லது கணக்குகளைப் பராமரிக்கும்.

(iii) சபையின் வருடாந்தக் கணக்குகளானது ஒவ்வொரு வருடமும் வருடாந்த பொதுக்கூட்டத்தின் போது கணக்காய்வு நோக்கத்துக்காக நியமிக்கப்படுகின்ற பட்டயக் கணக்காளர்களால் கணக்காய்வுக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.

(iv) சபையின் ஒவ்வொரு நிதியாண்டு முடிவடைந்த உடனடுத்து கடந்த வருடத்தின் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகள் வருடாந்த அறிக்கையில் பிரசுரிக்கப்பட வேண்டும் என்பதுடன் அதன் பிரதிகள் நிறுவகத்தின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

## நிறுவகத்தின் முகாமைத்துவம்

*முதன்மை அதிகாரி*

**23**. நிறுவகத்தின் நாளாந்த அலுவல்களை நிருவகிக்க ஒரு பிரதான நிறைவேற்று அதிகாரியை சபை நியமித்து வேலைக்கு அமர்த்தும்.

*முதன்மை அதிகாரியின் கடமைகளும் செயற்பாடுகளும்*

**24**. பிரதான நிறைவேற்று அதிகாரி :-

(i) நிறுவகத்தின் நாளாந்த அலுவல்களையும் செயற்பாடு களையும் நிருவகிப்பார் ;

(ii) தலைவருடன் கலந்தாலோசித்து நிறுவகத்தின் வளர்ச்சிக்காகவும், முன்னேற்றத்திற்காகவும் உபாய வியாபாரத் திட்டங்களை உருவாக்கி, வருடாந்தம் அதனை நாளதுவரைப்படுத்தி அங்கீகாரத்துக்காக அதனை சபைக்குச் சமர்ப்பிப்பார் ;

(iii) சபையினால் அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் தலைவருடன் கலந்தாலோசித்து உபாய வியாபார திட்டத்தை உருவாக்கி, பின்பற்றி மற்றும் நடைமுறைப்படுத்துவார் ;

(iv) ஒவ்வொரு ஊழியரினதும் அதிகார மட்டங்கள் மற்றும் வேலையின் பரப்பு உள்ளிட்ட, வங்கிக் கணக்கு செயற்பாட்டு அறிவுறுத்தல்கள் உள்ளிட்ட நிறுவகத்தின் நிறுவன அமைப்பை உருவாக்கி அதனை சபையின் அங்கீகாரத்துக்காகச் சமர்ப்பிப்பார் ;

(v) நிறுவகமானது சபையினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவக அமைப்புக்கு இணங்க செயற்படுகிறதா என்பதை உறுதிசெய்வார் ;

(vi) சபையினால் அவ்வப்போது கோரப்படக்கூடியவாறு முகாமைத்துவத் தகவல்கள் சகிதம் சபையினால் பரிந்துரைக்கப்படத்தக்கவாறு தொடந்து சபைக்கு அறிக்கை சமர்ப்பிப்பார் ;

(vii) நிறுவகத்தின் நற்பெயருக்கு மற்றும் / அல்லது முன்னேற்றத்துக்கு தாக்கம் செலுத்தக்கூடிய ஏதும் விடயங்கள் பற்றிய தகவல்கள் கிடைத்தவுடன் அதுபற்றி சபைக்கு அறிவிக்கவேண்டியதுடன் நிறுவகத்தினால் அவசியம் மேற்கொள்ளப்படவேண்டிய பதில் அல்லது நடவடிக்கைகள் பற்றி ஒரு திட்டத்தை வரைந்து தலைவரின் அல்லது அவர் இல்லாவிட்டால் அந்த சமயத்தில் தொடர்பை ஏற்படுத்த முடிகின்ற சபையின் மிக மூத்த அதிகாரியின் அங்கீகாரத்துக்குச் சமர்ப்பித்தல் வேண்டும் ; அத்துடன்

(viii) சபை அவ்வப்போது பரிந்துரை செய்கின்ற ஏனைய செயற்பாடுகளையும், கடமைகளையும் நிறைவேற்றுதல்.

**25.** நிறுவகத்தின் அனைத்து ஊழியர்களுக்கும் பிரதான நிறைவேற்று அதிகாரி பொறுப்பாக இருப்பார் என்பதுடன் சட்டத்தின் (15) ஆம் பிரிவுக்குட்பட்டு ஊழியர்களின் சேவை நியதிகள் மீறப்பட்டுள்ளமை பற்றிய முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்கு ஒரு குழுவை சபை நியமிக்கும். ஊழியர்கள்

***26.*** *விதி இலக்கம் (23)க்கு இணங்க கமிட்டி ஓர் ஊழியர் குற்றவாளி எனக் கண்டால் அந்த ஊழியர்களுக்கு எதிராக எடுக்கப்படவேண்டிய ஒழுக்காற்று நடவடிக்கைபற்றி சபைக்கு பரிந்துரை செய்யும்.*

***27.*** *விதி இலக்கம் (24) க்கு இணங்க கமிட்டியின் பரிந்துரை களைக் கவனத்தில் கொண்ட சபை பொருத்தமானது எனக் கருதப்படக்கூடிய மேற்படி நடவடிக்கையை அல்லது வேறேதும் ஒழுக்காற்று நடவடிக்கைகளை சாதாரண பெரும்பான்மையுடன் செயற்படுத்தும்.*

*இருந்தபோதிலும், ஓர் ஊழியர் சேவையிலிருந்து நீக்கப்பட வேண்டியிருப்பின் அந்தத் தீர்மானம் சபையின் ஏகோபித்த ஒரு தீர்மானத்தினால் அங்கீகரிக்கப்பட்டு தற்போதுள்ள சபையின் அனைத்து அங்கத்தவர்களாலும் அங்கீகரிக்கப்பட வேண்டும்.*

**நானாவிதமானவை**

*கணக்காய்வு*

***28.*** *இலங்கையில் கடமை புரிகின்ற பட்டயக் கணக்காய்வாளர் ஒருவர் ஒரு வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் சமுகமளித்திருந்த சாதாரண அங்கத்தவர்களின் ஒரு சாதாரண பெரும்பான்மைக்கு இணங்க நிறுவகத்தின் கணக்காய்வாளராக நியமிக்கப்படுவார்.*

***29.*** *ஒரு சபையின் பதவிக் காலத்தின்போது குறைந்தது இரண்டு (2) உள்ளகக் கணக்காய்வுகளை நிறுவகம் மேற்கொள்ளல் வேண்டும்.*

*“தொழில்சார் துர்நடத்தை” என்பதன் பொருள்*

***30.*** *இலங்கை காப்புறுதி நிறுவகச் சட்டத்துக்கு இணங்க “தொழில்சார் துர்நடத்தை” என்பதன் கருத்து, தற்போதைக்கு தொழில்சார் துர்நடத்தையாக ஒரு பொதுக்கூட்டத்தில் வைத்து அங்கத்தவர்களால் பரிந்துரைக்கப்பட்டுள்ள ஒரு செயற்பாடு அல்லது தவறுகையாகும்.*

***31.*** *அங்கத்தவர்களால் தொழில்சார் துர்நடத்தையாகப் பரிந்துரைக்கப்பட்டுள்ள ஒன்று அல்லது அனைத்து ஏற்பாடு களையும் அங்கத்தவர்களால் திருத்தவோ அல்லது மாற்றவோ அல்லது சேர்க்கவோ முடியும்.*